பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | மாசி 23 | செவ்வாய்க்கிழமை | 07.03.2023 | கதிர் 118

# மார்ச் 20க்கு முன் தேர்தல் இல்லை

### கால அவகாசம் போதாது என்கிறார் ஆணைக்குழுத் தலைவர்

(தன்வீன்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை மார்ச் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக நடத்துவது சாத்தியமற்றது என்று தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் நிமல் புஞ்சிஹேவா.

தேர்தல்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அந்தக் காலப் பகுதி போதாது. அதனால் தேர்தலை அவ்வளவு விரைவாக நடத்த முடியாது. இதனை அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்குத் தெளிவுபடுத்துவோம் என்றும் அவர் தெரிவித்தார்.

☞2



## பெண் கொலை: கணவர் கைது!

புஸ்ஸல்லாவையில் பெண்ணொருவர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கணினிப் பொறியியலாளரான அவரது கணவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மிரிஹான பொலிஸார் தெரிவித்தனர்.

நுகேகொடை - விஜேராம பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்த வேளையில் விசாரணைக்காக இன்று அதிகாலை அவர் கைது செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். எல்பொட - கட்டுகித்துல பகுதியைச் சேர்ந்த சதாசிவம் நிரஞ்சலா என்ற 25 வயதான பெண் புஸ்ஸல்லாவ - சோகம தோட்டப்பகுதியில் உள்ள புதரொன்றிலிருந்து சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

தாலிக் கயிறால் கழுத்து நெரித்து அவர் கொல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது என்று பொலிஸார் கூறினர். விசாரணைக்காக கைது செய்யப்பட்ட அவரது கணவர் ஒரு வருடத்துக்கு முன்னர் இந்தப் பெண்ணை திருமணம் செய்து கொண்டார் என்றும், இருவரும் களுபோவில பகுதியில் உள்ள வீடொன்றில் வாடகைக்குத் தங்கியிருந்தனர் என்றும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்தத் தம்பதியினர் கொழும்பில் இருந்து கட்டுகித்துல பகுதிக்குச் சென்றிருந்த போது, புஸ்ஸலாவை நகரில் வைத்து சந்தேகநபரான கணினிப் பொறியியலாளருக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். பின்னர் சந்தேகநபர் கொழும்புக்கு வந்துள்ளார் என அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் கூறினர்.

## இது ரகசியம் அல்ல!

உருட்டு உருட்டு உருட்டு என்று ஒரு புதிய பாடல் கேட்டிருக்கிறீர்களா? கேட்காதவர்களுக்கான அந்தப் பாடல் வரிகளை இங்கு தருகின்றேன்.

உருட்டு உருட்டு உருட்டு, நீ நல்லா உருட்டு உருட்டு, நீ உருட்டு உருட்டு உருட்டு, ஏய்! உருட்டு உருட்டு உருட்டு, நீ நல்லா உருட்டு உருட்டு, நீ உருட்டு உருட்டு உருட்டு

சுயமே எங்களோட கொள்கை என்று பேசிகிட்டு, சுகமா காலநக்கி பொழைப்பாங்க.

தமிழே மான என்று காலையும் தான் வாரிவிட்டு தனியா இங்கிலீஷ் வளர்ப்பாங்க.

மத்ததை முன்னே வைத்து மக்களையும் சிதைத்து நாட்ட பங்கு பிரிப்பாங்க

பெருமை சாதினு ஆணவத்த விதச்சி சீட்டு பிச்ச எடுப்பாயிங்க அவங்கள உருடணும்டா

உருட்டு உருட்டு உருட்டு.....

நாம எல்லாருமே மன்னருன்னு பீத்திப் புட்டு, மகனை ஸீனி ஆக்கத் துடிப்பாங்க

நீதி நேர்மை என்று நித்தம் நித்தம் கத்திப் புட்டு, வோட்டுக்கே நோட்டாத்தான் திணிப்பாங்க.

பெருசா தத்துவம்னு கண்டதையும் குழப்பி பாவ சந்தி சிரிப்பாங்க

தேசபக்தினு கோட்டையில மொழுங்கி கோமியத்த தெளிப்பாங்க அவிங்கள ஊருட்டணும்டா

உருட்டு உருட்டு உருட்டு..................

எழை வாழ்கையை எவனும் ☞2

## இன்று கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதியை தீர்மானிப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு இன்று காலை 9 மணிக்கு கூடவுள்ளதாக ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா காலைக்கதிர் பத்திரிகையிடம் உறுதிப்படுத்தினார்.

இந்தச் சந்திப்பில் ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் உட்பட, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன, அரச அச்சக திணைக்களத்தின் தலைவர் கங்கானி லியனகே மற்றும் பொலிஸ்மா அதிபர் சி.டி.ரத்நாயக்க ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான நிதியை விடுவிக்கத் தடையாக இருக்கக்கூடாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலேயே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் மூலமாக தேர்தலை நடத்துவதற்கு அதிகளவில் சாத்தியமான தினம் ஒன்று தொடர்பில் முடிவுக்கு வரமுடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் புஞ்சிஹேவா நம்பிக்கை வெளியிட்டார். ☞2



## பார்த்தசாரதியுடன் சஜித் சந்திப்பு

இலங்கைக்கு வந்துள்ள இந்தியாவின் முன்னணி இராஜதந்திரியும், ஊடகவியலாளரும், அறிஞருமான கோபால்சாமி பார்த்தசாரதியை திங்கட்கிழமை கொழும்பில் உள்ள இந்திய உயர்ஆணையகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்துப் பேசினார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கைக்கான இந்திய உயர் ஆணையர் கோபால் பாக்லேவும் சந்திப்பில் உடனிருந்தார்.

இந்த சந்திப்பின்போது, இலங்கையின் அபிவிருத்திக்கு இந்திய அரசின் முழு ஆதரவை எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நீண்டகால வலுவான இருதரப்பு உறவையும் நினைவு கூர்ந்தார். ☞2

## வாக்கெடுப்பு திகதியை இன்றே அறிவியுங்கள்

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் பேராசிரியர் பீரிஸ் வலியுறுத்து



தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்றைய கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலான திகதி இறுதி செய்யப்பட்டு அறிவிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தினார் சுதந்திர மக்கள் சபை உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

நாவலவில் உள்ள சுதந்திர மக்கள் சபையின் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் திங்கட்கிழமை பேசிய அவர், ஐக்கிய தேசியக் கட்சிக்கும், பொதுஜனபெரமுனவிற்கும் நாட்டின் மொத்த சனத்தொகையில் பத்து சதவீதமான மக்கள் கூட வாக்களிக்க மாட்டார்கள் என்பது கருத்துக் கணிப்புக்கள் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ☞2

## சரத்பொன்சேகாவுக்கு அரகலயவினர் எதிர்ப்பு



கொழும்பில் திங்கள்கிழமை நடந்த மக்கள் புரட்சி தொடர்பான நிகழ்வில் ‘பீல்ட் மார்ஷல்’ சரத்பொன்சேகா பேச அனுமதிக்கப்பட்டமைக்கு அரகலய போராட்டக்காரர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இலங்கையில் நிராயுதபாணிகள் மக் கள் புரட்சியை ஏற்படுத்தினார்கள் எனும் தொனிப்பொருளிலான மாநாடு, கொழும்பில் உள்ள இலங்கை காண்காட்சி மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. ☞2

## போராட்டங்களால் ரூ. 500 மில். இழப்பு

### தனியார் பேருந்து உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவிப்பு

கொழும்பு உட்பட நாட்டில் நடத்தப்படும் பேரணிகள் மற்றும் போராட்டங்களால் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் பேருந்து உரிமையாளர்களுக்கு 500 மில்லின் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆண்டின் முதலிரண்டு மாதங்கள் முழுமையாக நிறைவடைந்துள்ள நிலையில், தனியார் பஸ் துறையினருக்கு 500 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் நாடு முழுவதும் நடத்தப்பட்டுவரும் போராட்டங்கள் ☞2

## கீரிமலை ஆதிசிவன் ஆலய அழிப்பு சைவ மக்களுக்குப் பேரதிர்ச்சி

### ஆறு. திருமுருகன் கண்டனம்




(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.07

கீரிமலையில் இருந்த ஆதிசிவன் ஆலயம் இடித்து அழிக்கப்பட்ட செய்தி சைவ மக்களை பெரும் அதர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது ஆறு.திருமுருகன் தெரிவித்தார். இந்த அநாகரிகமான செயலை வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

கீரிமலையில் போர்த்துக்கீசர் காலத்தில் இருந்தே அமையப்பெற்றது ஆதிச்சிவன் ஆலயம். அதன் அருகே பாதாள கங்கை எனப்படும் நன்நீர் கிணறும் இருந்தது. இதன் அருகே சித்தர்களின் தியான மடமும் இருந்தது, அதிலே நல்லூர் தேரடிச் சித்தர் என எல்லோராலும் அறியப்பட்ட ☞2

## தேர்தல் நிதி விடுவிப்பு தீர்மானத்தை எதிர்க்கட்சிகள் கொண்டு வருகின்றன

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்குத் தேவையான நிதியை விடுவிக்க ‘நிதி விடுவிப்புத் தீர்மானம்’ ஒன்றை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற எதிர்க்கட்சிகள் கூட்டாக நடவடிக்கை எடுத்து வருகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் இழுபறி நிலைமைகள் தொடர்ந்தும் நீடிக்கும் நிலையில் பொது மக்கள் வாக்குரிமை தொடர்பில் எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்படும் சபை ஒத்திவைப்புவேளை விவாதம் மார்ச் 9, 10ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

அந்த விவாதத்திற்கு மேலதிகமாக, தேர்தலுக்கான நிதி விடுவிப்புத் தீர்மானத்தை முன்வைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எனினும், இந்தத் தீர்மானத்துக்கான வரைபையார் நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்பது தொடர்பில் எதிர்க்கட்சிகளிடம் ஒரு போட்டி காணப்பட்டது. எனினும் தொடர்ந்து நடந்த பேச்சுக்களை அடுத்து பிரதான எதிர்க்கட்சி என்ற அடிப்படையில் சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடமே இந்த விடயத்தைக் கையளிப்பதென இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அனைத்து எதிர்க்கட்சிகளின் பிரதிநிதித்துவத்துடனேயே தீர்மான வரைபு சபாநாயகரிடம் கையளிக்கப்படவுள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சித் தேர்தலுக்கென நிதி ஒதுக்கப்பட்டிருக்கின்றபோதும் அரசிடம் பணம் இல்லை என்று தெரிவித்து தேர்தலுக்கு நிதியை விடுவிக்க திறைசேரிச் செயலாளர் ஏற்கனவே மறுப்புத் தெரிவித்திருந்தார். அவ்வாறு எந்தவொரு அதிகாரியும் நிதி விடுவிப்பை மறுக்க முடியாது என்று உயர் நீதிமன்றம் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கல, துணிஞ்சு நீயும் நில்லடா

சோகம் நீங்கிட அழுத கூட்டத்தை கருத்தா ஒண்ணு சேரடா

கோடி சணம் சினம் கொண்டால் துயர் எது மில்லையே

ஒரு போரை நீயும் தொடங்கிட்டா
நாடுநகரங்கள் எல்லாம் பொதுவானது என்றுதான்
புது பூமி ஒன்றாய் படைத்திட்டா
உலகத்த உருடணும்டா&
உருட்டு உருட்டு உருட்டு......

இதுதான் அந்தப் பாட்டு வரிகள். இந்த வரிகளைப் பார்த்ததும் இங்குள்ள அரசியல்வாதிகளுக்காவே எழுதப்பட்டிருப்பதாக நீங்கள் நினைத்தால் அதற்கு நான் பொறுப்பில்லை. கம்பனி எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

இது தமிழ்நாட்டில் எழுதி இசையமைக்கப்பட்ட தமிழ்த் திரைப்படப் பாடல். அது முழுவதும் அங்குள்ள பேச்சு வழக்கில் எழுதப்பட்டிருக்கின்றது. நான் இங்கே அதனை வாசித்துப் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் வார்த்தைகளை மட்டும் மாற்றித் தந்திருக்கின்றேன். அதனை நீங்கள் யார் தலைக்காவது பொருந்துகிறது என்று பார்த்தால் அதற்கு நான் எந்த விதத்திலும் பொறுப்பாளி அல்ல.

********

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எப்படியாவது நடத்திவிடவேண்டும் என்று எதிர்க் கட்சிகளும் துடியாய் துடிக்கின்றன. ஆனால் அது நடக்கிற காரியமாகத் தெரியவில்லை. சட்டப்படி மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னரே தேர்தலை நடத்தவேண்டும் என்ற எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்க மறுத்துவிட்டது. நேரம் போதாது என்று காரணம் சொல்கிறது ஆணைக்குழு.

உள்ளூராட்சி சபைகள் சட்டத்தின்படி சபைகளின் ஆயுட் காலம் ஒரு வருட காலத்திற்கு நீடிக்கப்பட்டால் அதன் ஆயுட் காலம் முடிவடைவதற்கு முன்பான ஒரு திகதியில் கடைசி 6 மாத காலத்திற்குள் தேர்தல் திகதி அறிவிக்கப்படவேண்டும். அதன் அடிப்படையிலேயே மார்ச் 19ஆம் திகதியுடன் இப்போதுள்ள சபைகளின் காலப் பகுதி முடிவடைவதால் அதற்கு முன்னராகத் தேர்தலை நடத்தவேண்டும் என்று எதிர்க் கட்சிகள் வலியுறுத்தின.

தேர்தல்கள் ஆணைக்குழு அது முடியாத காரியம் என்று சொல்லியிருப்பதன் மூலம் தேர்தலை நிறுத்துவதற்கான அடுத்தடுத்த ஆப்புக்கள் இறுக்கப்படுவதற்கான கால அவகாசத்தை ஜனாதிபதி ரணிலுக்கும் பொது ஜன பெரமுனவுக்கும் வழங்கியிருக்கின்றது என்றே தோன்றுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அரசமைப்பு வழங்கியிருக்கும் அதிகாரத்தின்படி அறிவிக்கப்பட்ட தேர்தல் ஒன்றை 21 நாட்களுக்கு தேர்தல்கள் ஆணைக் குழுவால் ஒத்திவைக்க முடியும். அவசரகால நிலையில் அப்படிச் செய்ய முடியும் என்று தெரி விக்கப் பட்டிருக்கின்றது. இனி அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி ஏப்ரல் 30ஆம் திகதிக்கு முன்பான ஒரு தினத்தில் தேர்தலை ஆணைக்குழு அறிவிக்கப்படக்கூடும்.

அப்படி அறிவிக்கப்பட்டால், அதற்கிடையில் உள்ளூ ராட்சி சபைத் தேர்தல்கள் தொடர்பாக நாடாளுமன் றத்தில் ஏதாவது சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து ஆட்சித் தரப்பு தில்லுமுல்லு செய்யும் என்று எதிர்க்கட்சிகள் அஞ்சுகின்றன. அதைத் தடுக்கவே அவை மும்முரமாக நிற்கின்றன.

ஆனால், மார்த்தாண்டன் ரணில் அசராமல் இருப்பதைப் பார்க்கும்போது, எப்படியாவது பிளான் பண்ணி தேர்தலைப் பிற்போட்டு விடுவார் என்றுதான் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வாசகர்களே!

- இடி மின்னல் -

## மார்ச் 20க்கு முன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை எதிர்வரும் 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடத்துமாறு எதிர்க்கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியிருந்தன. ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் அரசுக் கட்சி, சுதந்திர மக்கள் கூட்டணி, தமிழ் முற்போக்கு கூட்டணி, அகில இலங்கை மக்கள் காங்ரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்ட கோரிக்கைக் கடிதம் ஆணைக்குழுவின் தலைவரிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எதிர்க் கட்சிகளின் கோரிக்கை சாத்தியமற்றது என்றார் ஆணைக்குழுத் தலைவர். மேலும், குறித்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளவாறு, 19ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக தேர்தலை நடத்துவது என்பது தற்போதைய சூழலில் பொருத்தமற்ற செயற்பாடாகும் என்றும் தெரிவித்தார்.

“நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகளின் அடிப்படையில் தபால் மூலமான வாக்கெடுப்பை நடத்த வேண்டியுள்ளது. அதன் பின்னரே நேரடிய வாக்கெடுப்பை நடத்த முடியும்.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முழுமையாக முன்னெடுப்பதற்கு இந்தக் குறிய காலப்பகுதி போதாது. ஆகவே, அரசியல் கட்சிகளின் கோரிக்கைளை நிறைவேற்றுவது சாத்தியமாற்றது.

இந்த விடயத்தினை அந்தக் கட்சிகளுக்கு நேரில் தெரியப்படுத்துவதற்குத் தயாராகவுள்ளோம். அக்கட்சிகளின் பிரதிநிதிகள் எம்மைச் சந்திப்பதற்கு நேரம் கோரியுள்ளார்கள். அக்கட்சிகளை நேரில் சந்திக்கின்றபோது அந்த விடயம் சம்பந்மாக தெளிவு படுத்துவோம்” என்றார் ஆணைக்குழுத் தலைவர்.

## இன்று கூடுகிறது ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம், அரச அச்சகத்திற்கு தேவையான பாதுகாப்புக் கடமைகளை பொலிஸார் வழங்குவதை உறுதி செய்தல், திறைசேரி நிதியை விடுவிப்பதற்கான கால அட்டவனையைத் தீர்மானத்தல் உள்ளிட்ட விடயங்களும் இந்தக் கலந்துரையாடலில் இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## சரத்பொன்சேகாவுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மாநாட்டில், கலந்துகொண்ட சரத்பொன்சேகா, அங்கு திடீரென சிற்றுரை ஒன்றை ஆற்றினார்.

”நாட்டில் உள்ள அரசியல்வாதிகளை திருத்தமுடியாது. அவர்களில் 50 சதவீதமானவர்கள் ஊழல்மோசடிக் குற்றச்சாட்டுக்களுககு உள்ளானவர்கள். அவர்கள் அரசியலுக்கு வந்திருப்பதே வியாபாரம் செய்யத்தான். சொத்துக்களை சேர்த்து அவர்கள் மூன்று, நான்கு பரம்பரையினர் கூட நிம்மதியாக இருக்குமளவிற்கு நிலைமைகளை உயர்த்திக்கொண்டுள்ளார்கள் என்று தனது சிற்றுரையில் குறிப்பிட்டார்.

அவரது உரை நிறைவடைந்தவுடன், மேடையேறிய அரகலய போராட்டக்காரர்கள், பொன்சேகாவை உரையாற்றவிட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த மாநாடு அரசியல் கட்சியினுடையதா என்ற கேள்வி எழுகின்றது. எமக்கு விடுக்கப்பட்ட அழைப்பில் அவ்வாறு அரசியல்வாதிகள் பங்கேற்பதாக எங்கும் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிகழ்வுக்கு அரசியல் சாயம் பூசுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று பகிரங்கமாக அறிவித்து கோசமெழுப்பினார்கள்.

இதனையடுத்து சரத்பொன்சேகா அவ்விடத்திலிருந்து வெளியேறினார்.

தொடர்ந்து ஏற்பாட்டாளர்களுக்கும், அரகல போராட்டக்காரர்களுக்கும் இடையில் அரசியல் சாயமற்ற நிகழ்வினை முன்னெடுப்பது பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நீடித்தன.

## வாக்கெடுப்பு திகதியை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் தெரிவித்தார்.

இதனால்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடக்கத்திலிருந்தே உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை ஒத்திவைப்பதற்கு கடும் முயற்சிகளைச் செய்துவருகின்றார். தனிநபரான தான் தேர்தலை ஒத்துவைக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்று அவர் கூறுவதை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது.

ஜனநாயக நாடொன்றில் தேர்தலை நடத்த வேண்டுமா இல்லையா என்பதை அரசியல்வாதி தீர்மானிக்கவே முடியாது. மக்களிடமே இறைமை உள்ளது. அரசியல்வாதி ஒருவர் தேர்தல் தொடர்பில் தீர்மானித்தால் ஜனநாயகமே மலினப்படுத்தப்படும்.

அந்த வகையில், செவ்வாய்க்கிழமை கூடும் தேர்தல்கள் ஆணைக்குழுவானது தேர்தல் திகதியை அறிவிக்கவேண்டும்.

இந்த விடயத்தில் தொடர்ச்சியான காலதாமதங்களை எந்தவொரு கட்டமைப்பும் செய்யக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## பார்த்தசாரதியுடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைப்ரஸ், அவுஸ்திரேலியா மற்றும் பாகிஸ்தானுக்கான இந்திய உயர் ஆணையராகச் சிறிது காலம் அவர் பணியாற்றியவர் பார்த்தசாரதி. பிரதமர் ராஜீவ் காந்தியின் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளராக இருந்தவர். பிரதமரின் ஊடகப் பேச்சாளராகப் பணியாற்றியவர். அந்த காலப்பகுதியில் அவர் இலங்கைக்கு பல தடவைகள் பயணம் செய்துள்ளார்.

அவர் தற்போது ஜம்மு மத்திய பல்கலைக்கழகத்தின் வேந்தராகவும், இந்தியாவின் புது தில்லியில் உள்ள காற்றாலை ஆற்றல் ஆய்வு மையத்தின் இயக்குநராகவும் உள்ளார்.

கடந்த இருபது ஆண்டுகளாக ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை விவகாரங்களில் தொலைக்காட்சி வர்ணனையாளராகவும் இருந்து வருகின்றார்

## போராட்டங்களால் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணிகள் தான் இதற்கு முழுக் காரணம். இந்த நிலையில் குறித்த விடயத்தை பொலிஸ் மா அதிபர், மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியவற்றின் கவனத்திற்கு கொண்டு செல்லவுள்ளோம். குறித்த இருதரப்பினரும் நடவடிக்கைகள் எடுக்காத பட்சத்தில் உயர் நிதிமன்றத்தினை நாடவேண்டிய நிலைமையும் ஏற்படலாம்.

அதேநேரம், எரிபொருள்களின் விலைகளை குறைத்தால் பேருந்துக் கட்டணங்களையும் குறைக்க முடியும். இல்லாவிட்டால் எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்தாவது போக்குவரத்துக் கட்டணத்தினை குறைக்க முடியும் என்று எதிர்பார்க்கின்றோம்.

தற்போது போராட்டங்கள், பேரணிகள் போன்ற-வற் றுக்காக பேருந்துகளை வாடகைக்கு அமர்த்தும் நிலைமைகள் காணப்படுகின்றன. இதனால் வருமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது உண்மைதான். ஆனால் அது ஏற்படும் இழப்பை ஈடுசெய்வதாக இல்லை. அதேநேரம், தேசிய மக்கள் சக்திதான் அதிகளவில் பேருந்துகளை வாடகைக்கு அமர்த்துகின்றது - என்றார்.

## கீரிமலை ஆதிசிவன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடையம்மாவின் சமாதியுடன் சடையம்மா மடமும் இருந்தது.

இதேபோன்று அப்பகுதியிலே நல்லை ஆதீனத்தின் முதலாவது குரு முதல்வரான மணி ஐயரின் சமாதியும் இருக்கின்றது. அதேபோன்ற பழமையான கதிரை ஆண்டவர் ஆலயமும் இருந்தது. இவ்வாறான ஆண்மீக அடையாளங்கள் அனைத்தையும் அழிக்கப்பட்டுத்தான் ஒரு ஆடம்பர மாளிகை அமைக்கப் பட்டுள்ளது என்பதனை அறியும்போது சைவ சமயத்தவர்களின் நெஞ்சம் வெடிக்கிறது.

இந்த ஆலயங்களின் நிலை குறித்து அறிய மிக நீண்டகாலமாகவே நாம் கோரிக்கை விடுத்துவந்த போதும் தற்போதுதான் உண்மை வெளிவந்துள்ளது. இவற்றை அழித்த செயலை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவற்றை மீள அமைத்தே ஆக வேண்டும். அந்த ஆலயங்கள் வரலாற்று சின்னங்கள் இருந்த இடங்கள் விடுவிக்கப்பட வேண்டும். அவற்றினை அழித்தமைக்கும் எமது வன்மையான கண்டனங்களையும் நாம் பதிவு செய்கின்றோம் - என்றார்.

## தேர்தல் நிதி விடுவிப்பு ......


(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வாரம் உத்தரவிட்டது.

இருப்பினும் நாடாளுமன்றத்தில் நிதி விடுவிப்புத் தீர்மானத்தை நிறைவேற்றுவதன் மூலம் தேர்தலுக்கு தடை வராமல் இருப்பதை உறுதிப்படுத்த எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. எனினும் அது குறித்து விவாதத்திற்கு அழைக்கும் உரிமை சபாநாயகர் சார்ந்தே உள்ள நிலையில், குறித்த தீர்மானவரைவு தொடர்பிலான இறுதி முடிவு சபாநாயகரின் கைகளிலேயே இருக்கின்றது.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



காலைக்கதிர் Kalaikkathir

## பொதுஜன பெரமுன கட்சியின்

# தேர்தல் பரப்புரைகள் தொடர்பில் பசில் தலைமையில் இன்று ஆராய்வு

### என்கிறார் சஞ்ஜீவ எதிரிமான்ன

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றி பெறும். தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இன்று விசேட சந்திப்பு இடம்பெறவுள்ளது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகப்பேச்சாளர் சஞ்ஜீவ எதிரிமான்ன தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -



தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொதுஜன பெரமுன பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றதாகும். ஏனைய அரசியல் கட்சிகளைக் காட்டிலும் தேர்தல் நடவடிக்கைளை நாங்களே முன்னெடுத்தோம். முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை அநுராதபுரத்தில் நடத்தத் தீர்மானித்திருந்தோம்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக் குழு இடைநிறுத்தியதைத் தொடர்ந்து தேர்தல் பிரசார நடவடிக்கைகளை இடைநிறுத்தினோம். உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தடையுத்தரவை தொடர்ந்து தேர்தல் பணிகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் தலைமையில் விசேட பேச்சு இன்று பொதுஜன பெரமுனவின் தலைமை காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது. அநுராதபுர நகரில் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அமோக வெற்றிப்பெறும். பொதுஜன பெரமுன கிராம புற அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளது. ஆகவே நிச்சயம் வெற்றிபெறுவோம். - என்றார்.



## மாமனிதர் கிட்டினன் சிவநேசனின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல்!

மாமனிதர் கிட்டினன் சிவநேசன் அவர்களது 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் திங்கட்கிழமை உணர்வுபூர்வமாக யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்ப்பாட்டில் இடம் பெற்ற இந்த நினைவேந்தலின் யாழ்ப்பாண நிகழ்வுகள் வடமராட்சி, கரவெட்டி தெற்கு, மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

பொது ஈகச் சுடரை மாமனிதர் கிட்ணன் சிவனேசனுடைய புதல்வி தாட்சாயினி சிவனேசன் ஏற்றினார். தொடர்ந்து அவரது திருவுருவப் படத்துக்கு மாமனிதரின் புதல்விகள் மலர்மாலை அணிவித்தனர்.

இதன்பிறகு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க.சுகாஸ் மற்றும் உறவுகள் ஆதரவாளர்கள், உட்பட பலரும் அணிவித்தது மலர் அஞ்சலி செலுத்தியதோடு, நினைவுரைகளும் ஆற்றப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக சேவையாற்றி வந்த காலத்தில் கிட்டினன் 2008 ஆம் ஆண்டு இதே நாளில், மாங்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் வைத்து கிளைமோர்த் தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## குருந்தூரில் ஒரு நீதி கீரிமலையில் வேறு நீதியா?

குருந்தூர் மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி விகாரை அமைக்கிறார்கள். அந்த இடத்தில் ஒரு வரலாற்றுப் பௌத்த ஆலயம் இருந்ததாகத் தெரிவித்தே விகாரை அமைக்கப்படுகின்றது. அங்கு விகாரை இருந்திருப்பதற்கான அடிக் கட்டுமானங்கள் இருப்பதால் அங்கு விகாரை இருந்தது, இல்லை என்பது பற்றி நாம் எழுந்தமானத்திற்குக் கருத்துச் சொல்ல முடியாது. அதைத் தீர ஆராய்ந்து ஆதாரங்களுடன், அறிவியல்பூர்வமான சோதனைகளுடன் வெளிப்படுத்தவேண்டியது தெல்லியல் திணைக்களத்தின் வேலை, கடமை.

கடமையைச் செய்யவேண்டிய தொல்லியல் திணைக்களமோ பௌத்த, சிங்கள பெரும்பான்மைவாதத்தால் முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நிலையில் உண்மைகள் அதன் கண்களுக்ககுத் தெரிவதில்லை. தொல்லியல் இடங்கள் என்று அறிக்கைப்படுத்தப்பட்ட பகுதிகளில் 400 மீற்றர்கள் சுற்றாடலில் எந்தக் கட்டுமானங்களையும் எழுப்ப முடியாது என்பது சட்டம். ஆனால் குருந்தூர் மலையில் தொல்லியல் இடத்திலேயே, அதாவது பழைய விகாரை இருந்தது என்று சொல்லப்பட்ட இடத்திலேயே புதிய விகாரை கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றது. விகாரை என்பதால் தொல்லியல் திணைக்களத்திற்கு அது கண்ணுக்குத் தெரியவில்லை.

இந்தப் பக்கம் மற்றொரு ஆலயம் யார் கண்ணுக்குமே தெரியவில்லை. கீரிமலை ஆதிச் சிவன் ஆலயம்தான் இப்போது யார் கண்ணுக்கும் தெரியவில்லை. பழம் பெருமை வாய்ந்த ஆலயம், சுமார் 500 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஆலயம் அது என்கிறார்கள் சைவ சமயிகள். ஆனால், அது இருந்த இடத்தைக்கூட அடையாளப்படுத்த முடியாத அளவிக்கு அது சிதைக்கப்பட்டு நில அமைவிடமே மாற்றியமைக்கப்பட்டுவிட்டது.

அந்த இடத்தில் படையினரால் ஜனாதிபதி மாளிகை என்ற பெயரில் ஆடம்பர வாழ்விடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதற்குள் அழிந்து போயிருப்பது ஆதி சிவன் ஆலயம் மட்டுமல்ல வேறு பல சைவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களும், சைவப் பெரியார்கள், சித்தர்களின் சமாதிகளும் என்கிறார் ஆறு. திருமுருகன்.

குருந்தூர் மலையில் பழம்பெருமை வாய்ந்தது என்று விகாரையை நீதிமன்றத்தின் தடையையும் மீறிக் கட்டுகிறார்கள். கீரிமலையில் பழம்பெருமை வாய்ந்த சைவ ஆலயத்தையும் மடங்களையும் இடித்து இருந்த இடம் தெரியாமல் அழிக்கிறார்கள். இரண்டையும் இலங்கைப் படையினரே செய்கிறார்கள்.

இதனால்தான் இலங்கைப் படையினரை சிங்களப் படையினர் என்று சொல்லவேண்டியிருக்கிறது. அதன் அடையாளங்களை மறைக்க, திரிக்க தமிழர்களை ஆட்சேர்ப்பது உட்பட பல அணுகுமுறைகளை இலங்கைப் படையினர் கடைப்பிடித்தாலும், அதன் அடிப்படைக் கட்டுமானம் மாற்றமடையவில்லை என்பதை இத்தகைய சம்பவங்கள் காட்டிக்கொடுத்துவிடுகின்றன.

இந்த இரண்டு சம்பவங்கள் குறித்தும் அரசு விசாரணை நடத்தி, அவற்றுடன் தொடர்புடைய படையினர், அதிகாரிகள் அனைவரையும் தண்டிக்க வேண்டும். அத்துடன் இந்த நாடு அனைத்து மதத்தவர்களுக்கும் சமமானது என்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும்.

# மின்சாரசபை ஊழியர்களை 40% குறைக்க முன்னேற்பாடு

## இராஜாங்க அமைச்சர் டி.வி.சானகவும் கூறுகிறார்



மின்சாரசபை ஊழியர்கள் எண்ணிக்கையை 40 சதவீதத்தால் குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவ அறிக்கையை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி துறை அமைச்சு தீர்மானித்துள்ளது என மின்சாரத்துறை இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்தார்.

மின்சாரத்துறைமறுசீரமைப்புதொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

24 மணித்தியாலமும் மின்சாரத்தை விநியோகிக்க மின்சாரத்துறை அமைச்சு விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்னுற்பத்திக்கான செலவை முகாமைத்துவம் செய்வதற்காவே மின்கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபையின் நட்டத்தை ஈடு செய்வதற்காக மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றமை அடிப்படையற்றது.

நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையை மறுசீரமைக்க நியமிக்கப்பட்ட நிபுணத்துவ குழு அறிக்கை அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைப்பு அறிக்கையை எதிர்வரும் மாதம் முதல் வாரம் அமைச்சரவையில் சமர்ப்பித்து அதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு 14 ஆயிரமாகக் காணப்பட்ட மின்சார சபை சேவையாளர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு 22 ஆயிரத்து 400 ஆக அதிகரித்துள்ளது.

மறுசீரமைப்பு அறிக்கையில் ஊழியர் குறைப்பு தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய மின்சார சபையின் ஊழியர்களின் எண்ணிக்கையை 40 சதவீதத்தால் குறைக்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்சார உற்பத்தி, விநியோகம் மற்றும் இதர சேவை நடவடிக்கைகளில் ஈடுபடும் நிறுவனங்களை ஒருமுகப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையின் செலவுகளை மட்டுப்படுத்தும் போது ஒரு முன்னேற்றகரமான தீர்மானத்தை எடுக்க முடியும். - என்றார்.

## தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான

# சூழ்ச்சிகளை முறியடிப்பது ஆணைக்குழுவின் கடமை



## ரில்வின் சில்வா கூறுகிறார்

நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பை மதித்து விரைவில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த வேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்காக முன்னெடுக்கப்படும் சூழ்ச்சிகளை முறியடிப்பதும் ஆணைக்குழுவின் தவிர்க்க முடியாத கடமையாகும் என்று மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

எதிர்வரும் 20 ஆம் திகதியுடன் உள்ளூராட்சிமன்றங்களின் ஆயுட்காலம் நிறைவடைகிறது. அதனை மீண்டும் நீடிக்க முடியாது.

அவ்வாறெனில் உள்ளூராட்சிமன்றங்களுக்கான தலைவர்களோ அல்லது உறுப்பினர்களோ காணப்பட மாட்டார்கள். இது வடக்கு மக்களுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

நீதிமன்றத் தீர்ப்புடன் தேர்தலை நடத்துவதில் காணப்பட்ட பாரதூரமான தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்தும் தேர்தலுக்கான நிதியை திறைசேறி செயலாளரால் விடுவிக்காமலிருக்க முடியாது.

தேர்தல் தொடர்பான இறையான்மைப் பலத்தை சவாலுக்குட்படுத்த முடியாது என்பது நீதிமன்ற தீர்ப்பில் தெளிவாகியுள்ளது.

ஆனால், நீதிமன்றம் இவ்வாறான தீர்ப்பை வழங்கியுள்ள போதிலும், தேர்தலை நடத்தாமலிருப்பதற்கான முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கைவிடவில்லை.

தேர்தலுக்கு அஞ்சுகின்றமையின் காரணமாகவே அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். தற்போதைய அரசாங்கத்துக்கும், ராஜபக்ஷ அரசாங்கத்துக்கும் மக்கள் ஆணை கிடையாது என்பது தெளிவாகியுள்ளது.

தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு இந்த அரசாங்கமும், ஜனாதிபதியும் மேலும் பல சூழ்ச்சிகளில் ஈடுபடக் கூடும்.

திறைசேரி மற்றும் அரச அச்சகம் என்பவற்றுக்கு தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என்று நீதிமன்ற தீர்ப்பில் ஊடாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இனினும் தேர்தல் ஆணைக்குழு இவர்களுடன் பேசுவதற்கு எதுவும் இல்லை.

எனவே, ஆணைக்குழு கூடி தேர்தலை நடத்தக் கூடிய மிக அருகிலுள்ள தினத்தை அறிவிக்க வேண்டும். அதனை விடுத்து தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கான சதித்திட்டத்துக்கு இடமளித்து விடக் கூடாது. - என்றார்.

# மீண்டும் ஒருவருட காலத்துக்கு தேர்தலைக் காலம் தாழ்த்த சதி!

## ஆணைக்குழு இடமளிக்கக்கூடாது என்கிறார் மரிக்கார்

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அதன் மூலம் சூழ்ச்சி செய்து மீண்டும் ஒரு வருடத்துக்கு தேர்தலைக் காலம் தாழ்த்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த திட்டமாகும்.

எனவே தேர்தல் ஆணைக்குழு அதற்கு இடமளிக்காமல் தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமல், நீதிமன்றத்தை நாடி சட்ட ரீதியான வெற்றியைப் பெற்றுக் கொண்டுள்ளோம்.

ஆனால் அரசாங்கத்தை எதிர்ப்பதாகக் கூறும் வேறு சிலர் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு கூட எதிர்ப்பை வெளியிடவில்லை.

தேர்தலுக்காக வரவு - செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முடக்குவதை தவிர்க்குமாறு தெளிவான தீர்ப்பை நீதிமன்று வழங்கியுள்ளது. எனவே பிரிதொரு சூழ்ச்சியின் மூலம் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆயத்தமாககிக் கொண்டிருக்கிறார் என எமக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்நிலையில் நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ள போதிலும், தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்ததைப் போன்று கடந்த வெள்ளிக்கிழமை தேர்தலுக்கான தினத்தை அறிவிக்காமையானது எம்மை அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. எனவே, தேர்தல் ஆணைக்குழு இனியும் தாமதிக்காது இன்றையதினம் தினத்தை அறிவிக்க வேண்டும்.

தொடர்ந்தும் கலந்துரையாடிக் கொண்டிருப்பதற்கு எதுவும் இல்லை. அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளமைக் கமைய பொலிஸ் திணைக்களத்துக்கும், நிதி அமைச்சிற்கும், அரச அச்சகத்திற்கும் பணிப்புரையை மாத்திரமே விடுக்க



வேண்டியுள்ளது. எனவே அதற்கான நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு விரைந்து எடுக்க வேண்டும்.

எல்லை நிர்ணய குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்தலை மேலும் ஒரு வருட காலத்துக்கு காலம் தாழ்த்துவதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அடுத்த திட்டமாகும். அவருக்கு வாக்கு வங்கி குறைவடைந்துள்ளமைக்கு எம்மால் என்ன செய்ய முடியும்? இவ்வாறு ஏதேனும் சூழ்ச்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டால் நாம் மீண்டும் மக்களுடன் வீதிக்கு இறங்குவோம். - என்றார்.

### மருந்து வாங்குவதற்குப் பணம் இல்லை

# மாற்றுத்திறனாளி பிள்ளைகளுடன் தற்கொலைக்கு முயன்றார் தாய்!

### கெப்பிட்டிகொல்லாவயில் சம்பவம்

வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளமை மற்றும் தனது இருமாற்றுத்திறனாளி ஆண்பிள்ளைகளின் மருத்துவ செலவிற்கு பணம் இல்லாததன் காரணமாக தாயொருவர் தனது இரு பிள்ளைகளுடன் தற்கொலை செய்துகொள்ள முயன்றவேளை அவரின் 21 வயது மகன் உயிரிழந்த பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் கெப்பிட்டிகொல்லாவ பொலிஸ் பிரிவில் கணுகஹவெல பிரதேசத்தில் பெண்ணொருவர் தனது அங்கவீனமுற்ற மூத்த மகன் மற்றும் பேச்சுத்திறனற்ற இளைய மகன் ஆகியோரை கிணற்றில் தள்ளிவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ள முயன்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கெப்பிட்டிகொல்லாவ பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், தாயால் கிணற்றில் தள்ளிவிடப்பட்ட ஒரு பிள்ளை உயிரிழந்துள்ளதாகவும், ஏனைய பிள்ளையும் தாயும் மீட்கப்பட்டு அநுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

இதன்போது உயிரிழந்தவர் 21வயது இளைஞன் ஆவார். இவரின் சடலம் அநுராதபுரம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதோடு, கெப்பிட்டிகொல்லாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# தேர்தல்களை பிற்போடுவது ரணிலின் பரம்பரை வழக்கம்

### உதய கம்மன்பில சாடல்



தேர்தலை பிற்போடுவது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பரம்பரை வழக்கம் என்றும் எவ்வாறாயினும் தேர்தலை பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

தேர்தல் விவகாரத்தில் உயர்நீதிமன்றம் அரசாங்கத்தின்செயற்பாடுகளுக்குகடுமையானதடை விதித்துள்ள நிலையில் உரிமையை வென்றெடுக்கப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் கூறியுள்ளார்.

மேலும் மாகாண சபைத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளமைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக் கூற வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் தோற்றம் பெற்ற தமிழருக்கு எதிராக இனக் கலவரம், வன்முறை மற்றும் 30 வருடகால ஆயுத போராட்டம் ஆகிய- வற்றை ஐக்கிய தேசியக் கட்சியே ஆரம்பித்தது என குற்றம்சாட்டியுள்ளார்.

# தேர்தல் செலவின சட்டம் குறித்து மக்களுக்கு விழிப்பூட்ட முயற்சி



தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டமூலம் தொடர்பில் பொதுமக்களை அறிவுறுத்தும் நடவடிக்கைகளை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் முன்னெடுத்துவருகின்றது.

இது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு, காத்தான்குடியில் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய இணைப்பாளர் எம்.என். விக்டர் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்ட மூலம் தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்செய்யப்பட்டதுடன்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் வாக்காளர்கள்நடந்துகொள்ளவேண்டிய வழிமுறைகள் தொடர்பாக கருத்துரைகளும் நடைபெற்றதுடன் வீதி நாடகங்களும் நடைபெற்றன.

தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளை மீறி செயற்படும் வேட்பாளர்களின் பதவியைப் பறிக்கும் அதிகாரம் இந்த சட்டத்துக்கு உள்ளது, தேர்தல் செலவீனங்கள் தொடர்பில் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலுக்கு மாறாக செலவு செய்யும் வேட்பாளர்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள், பொதுமக்கள் இந்த நேரத்தில் ஆற்றவேண்டிய பணிகள் தொடர்பாக இதன்போது அறிறுத்தல்கள் வழங்கப்பட்டன.

தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் காலம் என்ற காரணத்தால் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இந்த சட்ட மூலத்தை சரியாக பின்பற்றுகின்றார்களா என்பதை பொதுமக்கள் கண்காணிப்பதற்காக இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

## நெல்கொள்வனவு வேலைதிட்டம் அம்பாந்தோட்டையில் ஆரம்பம்!

பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லுணுகம்வெஹெர மற்றும் பெரலிஹெல பிரதேசங்களில் இருந்து மஹாகண்ணையில் நெல் கொள்வனவு இடம்பெற்று வருவதாக மாவட்ட செயலாளர் எச்.பி. சுமனசேகர குறிப்பிட்டுள்ளார்.

இவ்வருடம் அம்பாந்தோட்டை மாவட்டத்தின் மஹகன்னாவில் நெல் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

## மக்களின் உதவியை கோரும் பொலிஸ்



மாவனல்ல பொலிஸ் பிரிவில் உஸ்ஸாபிட்டி பிரதேசத்தில் யுவதியொருவர் கடந்த ஜனவரி 18 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என அவரது உறவினர்களால் மாவனல்ல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டுள்ளது.

28 வயதுடைய குறித்த யுவதி உஸ்ஸாபிட்டி - லெவுகே பிரதேசத்தைச் சேர்ந்த சச்சிந்திரா கீதாஞ்சலி ஜயரத்ன என்பவராவார்.

இவர் தொடர்பில் இதுவரையில் எவ்வித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை என்பதால் அவரைக் கண்டுபிடிப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பைக் கோருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி யுவதி தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 035 - 2247222 என்ற மாவனல்ல பொலிஸ் நிலைய தொலைபேசி இலக்கத்துக்கும் , 071- 8591418 என்ற மாவனல்ல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் இலக்கத்துக்கும் அழைத்து தெரியப்படுத்த முடியுமெனவும் பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## அரசியலுக்கு அப்பால் நாம் ஒன்றுபடுவோம்!

### சிவநேசதுரை சந்திரகாந்தன் அழைப்பு



அனைவரும் அரசியலுக்கு அப்பால் ஒன்றுபட்டு மட்டக்களப்பு மாவட்டத்துக்கான அபிவிருத்திக்காக உழைப்போம் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்தில் நீர்பாய்ச்சல் கால்வாய்களைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டதன் பின்னர் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழில்நுட்ப மாற்றத்தை நோக்கி விவசாய அமைப்புகள் மற்றும் பொது அமைப்புக்கள், மக்களை ஊக்கப்படுத்த வேண்டும் என அவர் இதன்போது வலியுறுத்தினார்.

மேலும், 2023 - 24 ஆம் ஆண்டுகளில் பயிர்களுக்கான நீர் பாசன திட்டங்களையும் கிராமிய வீதிகளையும் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

குறைந்தது உளவியந்திரத்தைக் கொண்டு செல்லுகின்ற முக்கியமான பாதைகளையாவது செய்துதர நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் குறிப்பிட்டார்.

தனது அமைச்சில் ஒரு கோடிக்கு மேலான பணம் இருப்பதாகவும் இந்த பணிகளுக்காக மூன்று மில்லியன் தொகையையாவது ஒதுக்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

23 வருடத்துக்கு முன்பாகத் திட்டமிடப்பட்ட, உன்னிச்சை நீர்பாசன திட்டத்தின் கீழ் உள்ள நாவற்காடு - பாலக்காடு நீர்ப்பாய்ச்சல் கால்வாயை புனரமைக்கும் பணிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட நீர்பாசனதிணைக்களத்தின் பணிப்பாளர் நாகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நீர்பாசனத்துறை இராஜாங்க அமைச்சர் சீந்திர ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழு தலைவரும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா உட்பட திணைக்களங்களின் தலைவர்கள், கமக்கார அமைப்புகளின் அதிகாரசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





# மாதவிடாய் விடுப்பு:

## விவாதிக்க வேண்டிய நேரம் இது. ஏன்?



ஸ்பெயின்நாட்டில் பெண்கள் மாதவிடாய்நாட்களில் சம்பளத்துடன் கூடிய விடுப்பு எடுத்துக்கொள்ள வழிவகை செய்யும் அந்நாட்டு சட்டத்துக்கு நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதன் மூலம், பெண்களுக்கு பணிக்காலங்களில் மாதவிடாய்க்கு விடுமுறை அளித்துள்ள முதல் ஐரோப்பிய நாடு என்ற பெருமை ஸ்பெயினுக்கு கிடைத்துள்ளது. ஸ்பெயினின் இந்தப் புதிய சட்டம் மாதவிடாய் விடுப்பு குறித்த விவாதமும் உலக அளவில் எழுந்துள்ளது.

மாதவிடாய் - முதலில் மாதவிடாய் என்ற பெயரே நமது சமூகத்தில் பிரச்சினையாகவும், இரகசியமாகவும் பார்க்கப்படுகிறது. இவ்வாறு மாதவிடாய் பற்றிய முழுமையான புரிதல்கள் இல்லாத ஒரு சமூக அமைப்பில் இருந்துகொண்டு இங்கு விடுப்பு என்பது பெண்களின் அடிப்படை உரிமைகளாக பார்க்கப்படாமல் சலுகைகளாக மட்டுமே பார்க்கப்படும். இவ்வாறான யதார்த்த சூழலில் மாதவிடாய் காலங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் உடல் ரீதியான வலிகள் மீம்ஸ்களாக பார்க்கும் மந்தை நிலை மனப்பான்மை மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

நமது சமூகத்தில் மாதவிடாய் குறித்த தொடக்கமே தவறான கண்ணோட்டத்தில்தான் பார்க்கப்பட்டு வருகிறது. மாதவிடாய் என்பது வெறும் உடல் அளவில் ஏற்படும் பிரச்சினை மட்டுமல்ல. சிலர், மாதவிடாய் காலங்களில் மன ரீதியான பாதிப்புகளான பதற்றத்துக்கும், மூட் ஸ்விங்ஸ்குக்கும் உள்ளாகிறார்கள்.

கார்ப்பரேட் போன்ற மேம்பட்ட நிறுவனங்களில் பணியாற்றும் பெண்களுக்கு மாதவிடாய் நாட்களில் கழிப்பறைகளைப் பயன்படுத்துவது சிரமமாக இருக்காது. ஆனால் அடிப்படை வசதிகள் இல்லாத சிறு நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் மாதவிடாய் நாட்களில் எதிர்கொள்ளும் சிக்கல்கள் ஏராளமாக உள்ளன. போதிய சுகாதார வசதிகள் இல்லாததுதான் இங்கு அடிப்படை பிரச்சினையாக பார்க்கப்படுகிறது. எனவே, மாதவிடாய் குறித்த புரிதல்கள் குடும்பம், பள்ளி, சமூகம் சார்ந்த அமைப் புகளில் முழுமையாக ஏற்படுவது கட்டாய தேவையாகி றது.

ஒரே தராசில் வைக்க முடியுமா? - முதலில் மாதவிடாய் விடுப்பு குறித்த புரிதல்கள் இங்கு பெண்கள் பலருக்கே இல்லை என்பதுதான் நிதர்சனம். நமது கல்வி அமைப்பும் இப்புரிதலுக்கான வாய்ப்பை இதுவரை ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்பதே உண்மை. நீங்கள் அலுவலகங்களிலோ, பள்ளிகளிலோ மாதவிடாய் காரணமாக சுருண்டு நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் பெண்களை பார்த்தீருப்பீர்கள். சில பெண்களோ மாதவிடாய் நாளுக்கான அறிகுறியே இல்லாமல் இருப்பார்கள். அதாவது மாதவிடாய் காலங்களில் ஏற்படும் உடல் உபாதைகள் என்பது ஒவ்வொருவரது உடலமைப்பை பொருத்து மாறுபடும். இவ்வாறான சூழலில் இதில் உள்ள இரண்டு பெண்களின் நிலைகளையும் ஒரே தராசில் வைத்து, அவளுக்கு வலி இல்லையே, உனக்கு மட்டும் மாதம், மாதம் எப்படி வலி ஏற்படுகிறது என்ற வாதத்தில் எந்த பயனும் இங்கு ஏற்படபோவதில்லை.

பலவீனப்படுத்துமா? - மாதவிடாய் விடுப்பு விவகாரத்தில், முதன்மையாக எழும் விமர்சனம் இம்மாதிரியான திட்டங்கள் பெண்களை மேலும் பலவீனப்படுத்தும் என்பதுதான். இரண்டாம் பாலினம் என்று வகைப்படுத்தி பெண்களின் உரிமைகள் ஏற்கெனவே பறிக்கப்பட்டுவிட்டன. ஆண்களால் கட்டமைக்கப்பட்ட இச்சமூகத்தில் முட்டி மோதி தங்களுக்கான வாய்ப்புகளை இப்போதுதான் பெண்கள் போராடி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாதவிடாய் விடுப்பு போன்றவைகள் பெண்களை சமூகத்தின் பார்வையிலிருந்து கூடுதலாக பலவீனப்படுத்தும் என்று பலரும் நினைப்பதில் தவறில்லை.

வேலைவாய்ப்பில் எதிர்வினை: அடுத்தது பெண்களுக்கு பணியிடங்களில் இன்னமும் சமமான வேலை வாய்ப்பும், சம ஊதியமும் மறுக்கப்பட்டு வரும் நிலையில் மாதவிடாய் விடுப்பு போன்றவை நிச்சயம் எதிர்வினைகளை உண்டக்கும் வாய்ப்பு இங்கு கூடுதலாகவே உள்ளது. இம்மாதிரியான விடுப்புகளை காரணம் காட்டி பணியிடங்களில் பெண்களுக்கு வேலை வாய்ப்பு மறுக்கப்படலாம். மறுபுறம் இதே காரணத்திற்காக பெண்களுக்கு பதவி உயர்வும், ஊதிய உயர்வும் மறுக்கும் சூழலும் உருவாகும்.

கொரோனா காலத்தை சுட்டிக் காட்டி நிறுவனங்கள் ஆட்குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது ஒரு நிறுவனத்தில் 5 பேர் நீக்கப்படுகிறார்கள் என்றால் அவர்களில் 3 பேர் பெண்களாகதான் இருந்தார்கள் என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே இதுபோன்ற எதிர்வினைகளை கவனத்தில் கொண்டு இவ்விவகாரத்தை அணுக வேண்டிய தேவை அரசுக்கும், பெண்கள் நல அமைப்புகளுக்கும் உள்ளது.

அமைப்புச்சாரா பெண்களின் நிலை? - மாதவிடாய்காகக் விடுமறை அளித்தால் அனைத்து தரப்பு பெண்களையும் சென்றடைவது அவசியம். குறிப்பாக அமைப்புசாரா நிறுவனங்களில் பணி செய்யும் பெண்கள் இதில் கொண்டுவரப்படுவது அரசின் முக்கிய பொறுப்பாக இருக்கவேண்டும். இதற்கான கண்கணிப்பு அமைப்புகளை செயல்பாட்டில் வைத்திருப்பதும் அவசியம்.

உலக நாடுகளில்.... ஜப்பானில் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் மாதவிடாய் தொடர்பாக விடுப்பு கேட்டால் அவர்களுக்கு விடுப்பு அளிக்க வேண்டும் என்ற முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. இந்தோனேசியாவில் 1948ஆம் ஆண்டே மாதவிடாய் விடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. அதன்படி மாதவிடாய் விடுப்பு கேட்கும் பெண்களுக்கு நிறுவனங்கள் இரண்டு நாட்கள் மாதவிடாய் விடுப்பு வழங்கும் முறை வழக்கத்தில் உள்ளது. தென்கொரியாவில், சட்டம் 73 இன் படி ஒவ்வொரு மாதமும் பெண்கள் மாதவிடாய் விடுமுறைகளை எடுத்துக் கொள்ளலாம்.

தைவான் - சட்டம் 14இன் படி, நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் மாதவிடாய் விடுமுறையை பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது என்று கூறுகிறது. ஜாம்பியாவில் பெண்கள் மாதவிடாயை காரணம் காட்டி ஒரு நாள் விடுப்பு எடுத்துக்கொள்ளலாம். வியட்நாமில் பெண்கள் மாதவிடாயை குறிப்பிட்டு மூன்று நாட்கள் விடுமுறை எடுத்துக் கொள்ளாம். இதற்காக அவர்களது சம்பளத்தில் பிடித்தம் மேற்கொள்ளப்படாது. பிரிட்டனிலும் மாதவிடாய் விடுப்பு வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

பெண்களுக்கான சம உரிமை, சம வாய்ப்பு, சம ஊதியம் வேண்டி நூற்றாண்டுகளாக நடந்த போராட்டத்தின் விளைவு அதற்கான கால் பகுதியை நாம் அடைத்திருக்கிறோம். ஆனால் கடக்க வேண்டிய தொலைவு நெடுந்தூரம் உள்ளது. பெண் பணியாளர்களின் பங்களிப்பு சம அளவில் இருந்தால் மட்டுமே நாட்டின் பொருளாதாரம் ஆரோக்கியமான நிலையில் இருக்கும் என்பதை அரசு அமைப்புகள் உணர வேண்டும். இதில் மாற்றங்கள் கொண்டுவராத வரையில் மாதவிடாய் விடுப்பு போன்றவை இச்சமூகத்தால் அத்தியாவசியமாக பார்க்கப்படாது!




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2023இல் வெளியிடப்பெற்றது.

# நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 06

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 22 திங்கட்கிழமை 06.03.2023 கதிர் 369

## கடத்தப்பட்ட ஹயஸ் வேம்பிராயில் மீட்பு



யாழ். கைதடியில் கடத்தப்பட்ட ஹயஸ் வாகனம், மீசாலை வேம்பிராய் பொது மயானத்துக்கு அருகாமையில் இன்று அநாதரவாக விடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

யாழ். கைதடி 2

# தேர்தலை நடத்த வலியுறுத்தி இத்தாலியிலும் ஆர்ப்பாட்டம்

## மக்களின் ஜனநாயகத்தை மறுக்காதே என முழக்கம்




இலங்கையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் திட்டமிட்டபடி நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி இத்தாலியில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இத்தாலியின் மிலானோ நகரில் கூடிய இலங்கையர்கள் பாதாகைகளுடன் திரண்டு ஆட்சியாளர்களுக்கு எதிராக முழக்கமிட்டனர். 2



## முல்லைத்தீவிலும் இலம்பி நோய் தாக்கம் தீவிரம்

முல்லத்தீவு மாவட்டத்தின் சில பகுதிகளிலும் பெரியம்மைநோய்தாக்கம்காரணமாக சில கால்நடைகள் உயிருக்குப் போராடும் நிலையில் உள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். புதுக் குடியிருப்பு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு பகுதியில் இவ்வாறு பல கால்நடைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நோய் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகம் தாக்கி வருவதாக சில தினங்களுக்கு முன்னர் அங்குள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்திருந்தனர். இந்த நிலையில் முல்லைத்தீவிலும் இந்த நோய் பரவியுள்ளமை தெரியவந்திருக்கிறது.

விசுவமடுவில் இந்த நோயால் பாதிக்கப்பட்ட கால் நடைகள் நீர் கூட அருந்த முடியாத நிலையில் மெலிந்து காணப்படுகின்றன. இந்த நோய் தாக்கத்திற்கான மருந்துகளைப் பெற முடியாத நிலையில் மிக அதிகமான மன உளைச்சலுக்குத் தாம் ஆளாகியுள்ளனர் எனவும் 2



## எதிர்க்கட்சித் தலைவருடன் நியூசிலாந்து தூதுவர் பேச்சு

இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் மைக்கல் அப்பிள்டனுக்கும்எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக் கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இன்று நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் விவகாரங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது 2

### நாடாளுமன்றத்தைக் கலைத்து

## பொதுத்தேர்தலை உடன் நடத்துங்கள்

### ஜனாதிபதியிடம் ஓமல்பே சோபித தேரர் கோரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டுப்பற்று உண்மையாகக் காணப்படுமாயின் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத்தேர்தலை நடத்தி புதிய அரசை ஸ்தாபிக்க வேண்டும். மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுக்குச் சர்வதேசம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது.

– இவ்வாறு மக்கள் பேரவை சபையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தற்போது பாரிய போராட்டம் காணப்படுகின்றது. தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு அவதானம் செலுத்தியுள்ள நிலையில் தேர்தலைத் தொடர்ந்து பிற்போட அரசு பாரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. அரசின் நோக்கத்துக்கமைய உள்–ளூராட்சி சபைத் 2

## மாற்று அரசியல் கலாசாரம் மலையகத்தில் மிக அவசியம்

### முன்னாள் எம்.பி. திலகர் வலியுறுத்து



மலையகத்திலே படித்தவர்கள் அரசியலிலே பங்கேற்பதல்லை என்கின்ற மாயையை உருவாக்கி தாங்கள்தான் சகலருக்கும் தலைமை கொடுக்கின்றோம் என மரபுசார் அரசியல் தலைமைகள் பொய்யான புனைவு அரசியலை முன்வைத்து வருகின்றன.

ஆனால்,உண்மைநிலை அதுவல்ல. மலையகத்திலே ஆரம்பத்தில் இருந்தே அறிவார்ந்த அரசியலை முன்வைத்துச் செயற்பட்ட பல ஆளுமைகளை அடையாளம் காட்ட முடியும். மலையகத்தில் படித்தவர்கள் அரசியலுக்கு வருவதில்லை எனும் பொய்யான மாயையை உருவாக்கி அவ்வாறு வருபவர்கள் ஓரங்கட்டப்பட்டு வருகிறார்கள் என்பதே மெய் என்பதை அரசியல் மட்டத்தில் மக்களிடத்தில் கொண்டு செல்ல வேண்டும். அதற்கு மலையகத்தில் மாற்று அரசியல் கலாசாரம் மிகவும் அவசியம்.

இவ்வாறு மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் திலகராஜா வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை முன்னிறுத்தி அக்கரப்பத்தனை பிரதேச முதன்மை வேட்பாளரும் ராணிவத்தை வட்டார வேட்பாளருமான இளம் பட்டதாரி நீலா பன்னீர்செல்வத்தை ஆதரித்து பெரிய ராணிவத்தை, மவுசால்ல தோட்டங்களில் இடம்பெற்ற மக்கள்சந்திப்பில்கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே முன்னாள் எம்.பி. திலகராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: 2

## ரூ. 3 கோடி பெறுமதியான பொருட்கள் தீ கருகி நாசம்

### கொட்டகலையில் நேற்றிரவு சம்பவம்



நுவரெலியா மாவட்டம், கொட்டகலை நகர பகுதியில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் தளபாடக் கடைத் தொகுதியும், வீடும் முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தத் தீ விபத்து நேற்றிரவு 9.30 மணியளவில் இடம்பெற்றது என்று பிரதேசவாசிகள் கூறினர்.

திம்புள்ளை – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் – நுவரெலியா பிரதான வீதியில் கொட்டகலை – வூட்டன் பசார் பகுதியில் வீதிக்கு அருகாமையில் உள்ள ஒரே கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள தளபாடக் கடை மற்றும் வீடு ஆகியன முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளன.

திம்புள்ளை – பத்தனைப் பொலிஸார் மற்றும் பிரதேச பொதுமக்கள், நுவரெலியா மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர், கொட்டகலை இராணுவத்தினர், இராணு–வத்தின் தீயணைப்புப் பிரிவினர் ஆகியோர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்தன. சுமார் 4 மணித்தியாலயங்களுக்குப் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எனினும், பொருட்கள் மற்றும் ஆவணங்கள் என அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீக்கிரையாகிய அனைத்தும் ஒரே உரிமையாளருக்குச் சொந்தமானவை எனவும், சம்பவம் இடம்பெற்ற வேளை உரிமையாளர் மற்றும் அவரின் மனைவி ஆகியோரே இருந்துள்ளனர் எனவும், எனினும் அவர்கள் எந்தவிதக் காயங்களும் இன்றி காப்பாற்றப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் மேலும் கூறினர். தீயினால் சுமார் 3 கோடி ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து சேதமாகியுள்ளன. தீ ஏற்பட்டமைக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் திம்புள்ளை – பத்தனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசுடன் சேரும் திட்டம் தற்போதைக்கு இல்லை

### இப்படிகூறுகின்றார் ராஜித




தற்போது அரசுடன் இணைவதற்கான எந்தத் திட்டமும் என்னிடம் இல்லை.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தேசிய அரசு தொடர்பான பேச்சின்போது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசுடன் இணைய விருப்பம் தெரிவித்திருந்த ராஜித, இன்று ஊடகம் ஒன்றிடம் இவ்வாறு கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசில், அவர் கடந்த காலங்களில் வகித்து வந்த சுகாதார அமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளது என வெளியான செய்திகள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ராஜித மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க ஜனாதிபதியின் அண்மைக்கால வேலைத்திட்டம் உள்ளிட்ட திட்டங்களைப் பாராட்டி ராஜித வெளியிட்ட சில அறிக்கைகளால் அவரது கட்சியின் மூத்த உறுப்பினர்களின் விமர்சனத்தை எதிர்நோக்கினார்.

மேலும் சுகாதார அமைச்சர் போன்ற ஒரு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டால், நிலவும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதில் முக்கிய பங்காற்ற முடியும் என கடந்த வாரம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ராஜித தெரிவித்திருந்தார்.

## இந்த வருட இறுதிக்குள் அரசியல் தீர்வு வேண்டும்

### வலியுறுத்துகின்றார் ராஜித

காலத்தை இழுத்தடிக்காமல் மூவின மக்களும் ஏற்கும் அரசியல் தீர்வை இவ்வருடத்துக்குள் அரசு வழங்கியே தீர வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

தேர்தல் என்று கூறி அரசியல் தீர்வுக்கான சர்வகட்சிப் பேச்சைப் புறக்கணிக்கவோ அல்லது அந்தப் பேச்சை ஒத்திவைக்கவோ முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற சர்வகட்சிக் கூட்டங்களில் நானும் பங்கேற்றேன். அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளனர். இது வரவேற்கத்தக்கது. ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில்தான் ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உள்ளனர்.

ஜனாதிபதிகூறியதுபோல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் முரண்பாடுகள் இல்லாத – ஒருமித்த முடிவை எடுக்க வேண்டும் – என்றார்.

## மாற்று அரசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மலையகத்தில் படித்தவர்கள் அரசியலில் பங்கேற்பதில்லை எனும் பொய்யான கருத்தை முன்வைத்து புனைவு அரசியல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

1920களில் மலையகத்தில் அரசியல் செயற்பாட்டு தொடக்கத்தை வழங்கி சட்டசபையிலும் அரசவையிலும் அங்கம் வகித்த மலையக தேச பிதா கோ. நடேசய்யர் கற்றறிந்த ஊடகவியலாளரும் பன்னூலாசிரியருமாவார்.

1936ஆம் ஆண்டு தொழில் மற்றும் வாணிப அமைச்சராக இருந்த கண்டி பன்விலையைச் சேர்ந்த மலையகத்தவரான பெரி.சுந்தரம் என்பவராவார். அவர் அந்த நாளிலேயே லண்டன் பரிஸ்ட்டர் எட் லோ எனும் பட்டம் பெற்றவர்.

1947 ஆம் ஆண்டு நாடாளுமன்றில் உறுப்பினராக இருந்த ஜி. ஆர். மோத்தா, டி. ராமானுஜம், சி.வி. வேலுப்பிள்ளை போன்றவர்கள் கற்றறிந்த அறிவார்ந்த அரசியல் முன்வைப்புகளைச் செய்தவர்களே. அவர்களது விவாதங்களை ஹன்சாரட் அறிக்கையிலே கண்டு வியந்து இருக்கின்றேன்.

1960 களில் வி.கே. வெள்ளையன் போன்ற கல்வியாளர்கள் தொழிற்சங்கத் தலைவர்களாகச் செயற்பட்டார்கள். தேர்தலிலும் அவர் போட்டியிட்டார். இலங்கை திராவிட இயக்க முன்னோடி ஏ. இளஞ்செழியன், பாடசாலை அதிபர் சட்டத்தரணி இரா. சிவலிங்கம் போன்றோர் மலையகத்தலே காத்திரமான அரசியலை முன்வைத்தவர்களே.

1980 களில் வி.டி. தர்மலிங்கம், பி.ஏ. காதர், மு. சிவலிங்கம், ஏ. லோறன்ஸ் போன்றவர்கள் அரசியலில் முனைப்புடன் செயற்பட்டவர்களாவர்.

1990 களில் பி.பி.தேவராஜ் போன்றவர்கள் இராஜாங்க அமைச்சர்களாக இருந்தார்கள். அவர் இலண்டனில் உயர் கல்வி கற்கப் போய் அரசியல் ஈர்ப்பால் அதனையே தொடர்ந்தவர்.2010 ஆண்டு நாடாளுமன்றத்திலும் கூட சட்டத்தரணி இராஜதுரை அங்கம் வகித்தார்.

இவ்வாறு எல்லாக் காலத்திலும் மலையகத்தில் கற்றிவாளர்களின் அரசியல் பிரசன்னம் இருந்து வந்துள்ளது. ஆனால், அவ்வாறு முன்வருபவர்களைக் கொண்டு மலையகத்தில் அறிவார்ந்த அரசியலை முன்கொண்டு செல்லாமல் தமது அரசியல் அதிகார பலத்தைத் தக்க வைத்துக்கொள்வதற்காக மலையகத்திலே படித்தவர்கள் அரசியலிலே பங்கேற்பதில்லை என்கின்ற மாயையை உருவாக்கி தாங்கள்தான் சகலருக்கும் தலைமை கொடுக்கும் அரசியல் தலைமைகள் என மரபுசார் அரசியல் தலைமைகள் பொய்யான புனைவு அரசியலை முன்வைத்து வருகின்றனர்.

அறிவார்ந்த அரசியல் கருத்துக்களையும் செயற்பாடுகளையும் முன்வைப்போர் ஓரங்கட்டப்பட்டு வந்துள்ளார்கள். ஒரேயொரு முறை நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி நுவரெலியா மாவட்டத்தின் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் என சான்று வாங்கிய எனக்கு அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்குக் கூட வாய்ப்பு வழங்கப்படவில்லை. தேசியப் பட்டியலில் வாய்ப்பு வழங்குவதாகத் திட்மிட்டப்பட்ட அடிப்படையில் என்னை வெளியேற்ற நினைத்தார்கள்.

என்னை அரசியலில் இருந்து வெளியேற்ற அவர்களால் முடியாது. நான் பிறந்ததில் இருந்தே அரசியல்வாதி. இறக்கும் வரை அரசியல்வாதி . மாற்று அரசியல் கதைகளைப் பேசிக் கொண்டு இருக்காமல் அதனைக் களத்தில் இறங்கி செய்துப் பார்ப்பவன்.

வாடகைக்கு வாகனம் அமர்த்தி ஆதரவாளர்களை மண்டபத்துக்கு அழைத்து பேசிவிட்டுச் செல்வது அல்ல எனது அரசியல். மக்களைத் தயக்கமின்றி களத்துக்குச் சென்று சந்தித்து எனது கருத் துக்களை முன்வைப்பவன்.

அத்தகைய ஒரு முயற்சியாகவே மலையக அரசியல் அரங்கத்தைத் தொடங்கி இருக்கின்றேன்.

அரங்கத்தில் பல நூறு மாணவர்கள் அரசியல் பயில்கின்றார்கள். அவர்கள் தேர்தல் களத்திலும் இறங்கியுள்ளார் கள். அவர்களுக்கு ஆதரவு தேடி ஊர் ஊராகப் பயணிக்கின்றேன். பிரசாரம் செய்கின்றேன்.

மலையகத்திலே மாற்று அரசியல் அரசியல் கலாசாரம் ஒன்றை வேண்டி நிற்கும் மக்களுக்கு மலையக அரசியல் அரங்கம் ஒரு தெரிவாக இருக்கின்றது. அதனை ஆதரிக்குமாறு வேண்டுகின்றோம் – என்றார்.

## பொதுத் தேர்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தல் தற்போது பிற்போடப்பட்டுள்ளது.

மாகாண சபைகளாலும், உள்ளூராட்சி சபைகளாலும் அரச செலவுகள் மாத்திரம் மிகுதியாகுகின்றதே தவிர நாட்டுக்கு எவ்வித பயனும் கிடைக்கப்பெறவில்லை. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி 8 ஆயிரம் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதால் அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாட்டுப்பற்று உண்மையாகக் காணப்படுமாயின் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்த வேண்டும். இந்த நாடாளுமன்றத்துக்கு மக்கள் ஆணை சிறிதேனும் கிடையாது.

நாட்டு மக்கள் 225 உறுப்பினர்களையும் திருடர்கள்க் என கடுமையாக விமர்சிக்கிறார்கள். பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண மக்களின் ஆதரவு அவசியம். ஆகவே, நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி புதிய அரசைத் தோற்றுவிக்க வேண்டும்.

மக்கள் ஆணை இல்லாத இந்த அரசுக்குச் சர்வதேசம் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்காது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு இந்த மாதம் கிடைக்கும் என அரசு குறிப்பிடுவதை நம்ப முடியாது – என்றார்..

## கடத்தப்பட்ட.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கில் விற்பனைக்காக விடப்பட்டிருந்த ஹயஸ் வாகனத்தைப் பார்வையிட வந்த நபர்கள் அதனை ஓடிப் பார்ப்பதாக கூறிக் கடத்திச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

வாகன உரிமையாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த ஹயஸ் வாகனம் மீசாலை வேம்பிராய் பொது மயானத்திற்கு அருகாமையில் இலக்கத் தகடுகள் அகற்றப் பட்டு, அநாதரவாக விடப்பட்டிருந்த நிலை யில் மீட்க்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றன.

## எதிர்க்கட்சித்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்குமாறு நியூசிலாந்து தூதுவரிடம்

எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத் தார். இலங்கையில் வறுமையை ஒழிக்க நியூசிலாந்து அரசின் ஆதரவைக் கோரிய எதிர்க்கட்சித் தலைவர், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் குறித்தும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டு அரசியலில் தனித்துவ அடையாளத்தைப் பதித்து எதிர்க்கட்சியின் அரசியல் கட்சி என்ற வகை யில் பிரபஞ்சம் மற்றும் மூச்சு வேலைத்திட்டங்கள் மூலம் நாட்டுக்குப் பெறுமதி சேர்த்ததை எதிர்க்கட்சித் தலை வரால் நினைவுகூரப்பட்ட தோடு, நியூசிலாந்து தூதுவரின் பாராட்டும் கிடைக்கப் பெற்றது.

## கண்டியில் போதைப் பொருள்களோடு
# 4 பெண்கள் உட்பட 10 பேர் கைது விசேட சுற்றிவளைப்பில் சிக்கினர்

கண்டி, போகம்பர பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் போதைப்பொருள்களுடன் 10 பேர் கைதுசெய்யப் பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கண்டி பொலிஸார், பொலிஸ் மோப்ப நாய் பிரிவினர் ஆகியோர் இணைந்து மேற்கொண்ட விசேட போதைப்பொருள் சுற்றிவளைப்பில் பெண்கள் நால்வர் உட்பட 10 பேர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 39 கிராம் 265 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்டவர்களில் ஆண்கள் 26 முதல் 52 வயதுடைய ஹீரஸ்ஸகல, சுதும்பொல, மஹியாவை, கண்டி மற்றும் திகன பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும், பெண்கள் நால்வரும் 24 முதல் 49 வயதுடைய கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் கண்டி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

இந்த சுற்றிவளைப்பின் போது 48 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## தேர்தலை நடத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு நாளை திறைசேரிச் செயலாளர் மற்றும் அரச அச்சகப் பணிப்பாள ருடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ள நிலையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

தேர்தலை நடத்த வலி யுறுத்தி இலங்கையில் ஏற்கனவே பல ஆர்ப் பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

கடைசியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டமை உள்ளிட்ட பல் வேறு காரணங்களுக்காக இந்த ஆர்ப்பாட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

ஜேவிபியினரால் கடைசியாக நடத்தப்பட்ட இத்தகைய ஆர்ப்பாட்டத்தின்போது அந்தக் கட்சி யின் வேட்பாளர் ஒருவர் உயிரிழந்தார். நாட்டின் பல பகுதிகளில் ஆங்காங்கே சிறியளவிலான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

தேர்தலை நடத்தக்கோரி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றபோதும் இந்த வருடத்தில் தேர்தலை நடத்திவேண்டிய அவசியம் ஏதுமில்லை என்று அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்து தெரிவித்து வருகின்றார்.

இத்தகைய நிலையிலேயே ஆர்ப்பாட்டங்கள் இலங்கையைத் தாண்டி வெளிநாடுகளிலும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

இத்தாலி, மிலான் நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான இலங்கையர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் ஆட்சியாளர்களுக்கு எதிராக முழக்கமிட்டனர்.

இலங்கை மக்களின் ஜனநாயக உரிமையை அரசு மதிக்கவேண்டும் என்று வலியுறுத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள், அமைதியான போராட்டங்கள் மீது ஆட்சியாளர்கள் கட்டவிழ்த்துவிடும் வன்முறைகளுக்கும் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

## முல்லைத்தீவிலு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கால்நடைகள் பெரும் அவதிப்படுவதாகவும் கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

சில கால்நடை உரிமையாளர்கள் தமது வாழ்வாதாரமே அழியும் நிலை கானப்படுவதாகக் கவலை தெரிவித்தனர் எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட கால்நடை வைத்திய அதிகாரிகள் கால்நடைவளர்ப்போரின் நளனை கருத்தில் கொண்டு எம்மை கால்நடைகளின் இழப்பில் இருந்து பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே கால்நடை உரிமையாளர்களின் வேண்டுகோளாக அமைந்துள்ளதாக கால்நடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



# மட்டு. மாதுறுஓயா சிங்கள மயப்படுத்தல் திட்டத்துக்கு நிதி வழங்கும் நிறுவனங்கள் உடன் நிறுத்தவேண்டும்!

## தவறின் அலுவலகம்முன் போராடுவோம் என கஜேந்திரகுமார் எச்சரிக்கை

மட்டக்களப்பு மயிலந்தனை மடு மாதந்தனை மேய்ச்சல்தரை பகுதியில் சிங்கள மயப்படுத்தலுக்காகதிட்டமிடப்பட்ட மாதுறு ஓயாவலது கரை திட்டத்துக்கு தமிழ்த் பிரதேசத்தின் ஓர் அங்குலம் நிலம்கூட வழங்க முடியாது என்பதுடன், நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்கள் இதனை நிறுத்தவேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் போராட்டம் நடத்துவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான பொன்னம்பலம் கஜேந்திரகுமார் எச்சரிக்கை விடுத்துள்ளார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார், செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ் மற்றும் கட்சி ஆதரவாளர்களுடன் மயிலந்தனை மாதந்தனை மேச்சல் தரை பகுதிக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) விஜயம் மேற்கொண்டு பண்ணையாளர்களை சந்தித்து அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்த பின்னர் ஊடகங்களக்கு கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் –

மட்டக்களப்பு பொலன்னறுவை எல்லைப் பிரதேசமான மயிலந்தனை மடு பெரிய மாதந்தனை பிரதேசத்தில் மேச்சல்தரை பகுதியில் கால்நடை பண்ணையாளர்களை அச்சுறுத்தி மாடுகளை வெட்டி அவர்களை பரம்பரையான மேச்சல்தரையில் இருந்து ஓடவைப்பதற்காக முழுமூச்சிலான திட்டம் கடந்த இரண்டு வாரத்தில் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

பண்ணையாளர்களின் இந்தப் பிரச்சனைகளை அவர்கள் பல இடங்களில் முறையிட்டனர். ஆனால் எந்த ஓர் இடத்திலும் அவர்களுக்கு முடிவு இல்லாமல் தொடர்ச்சியாக அவர்களின் வாழ்வே கேள்விக்குறியாகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. மாதுறு ஓயா வலதுகரையை சிங்களமயமாக்குதலுக்கான நோக்கத்தோடு இந்த பண்ணையாளருக்கு எதிராக நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது என்பது நன்றாக விளங்குகின்றது.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர், வனவளதிணைக்களம், மகாவலி அபிவிருத்தி சபை போன்ற அனைத்துக் கட்டமைப்புக்களும் இங்குள்ள மேச்சல்தரை காணிகளை அபகிப்பதற்கான நடவடிக்கைகளில் உறுதியாக இருக்கின்றனர்.

நீதிமன்ற உத்தரவு இருக்கின்றது இந்த பிரதேசத்தில் தமிழ் விரோத நடவடிக்கை சிங்கள விரோதிகளால் முன்னெடுப்பதைத் தடுக்க ஒருவருடத்துக்கு மேலாக இருக்கின்றது. கிழக்கு மாகாண ஆளுநருடைய முழு ஒத்துழைப் புடன் கண்ணுக்கு முன்னால் அவருடைய வழிகாட்டலில் நடக்கின்றது என்றால் எந்தளவுக்கு இந்த இனவாதிகள் சட்டத்தையும் நீதியையும் மதிக்கின்றார்கள்?

எனவே தமிழ் பிரதேசத்தை இன சுத்திகரிப்பு நடத்துவதற்கும் சிங்கள குடியேற்றத்தை நடாத்தி இங்குள்ள மக்களை பட்டினியில் சாவடிக்கின்ற நடவடிக்கை மாதுறு ஓயா அபிவிருத்திக்கு நிதி உதவி வழங்குகின்ற சர்வதேச நிறுவனங்களே நீங்களும் தமிழ் இன சுத்திகரிப்பிற்கு உடந்தையாக இருக்கின்றீர்கள்.

எனவே உங்களுக்கு இருக்கின்ற நிதியை எந்தவிதமான நிபந்தனையும் போடாமல் சிங்கள இனவாத சித்தாந்தத்துக்கு விலைபோகின்றதற்கு இந்த நிதி பயன்படுத்தப்படுகின்றது என தெரிந்துவைத்திருக்க வேண்டும். இதை தடுத்துநிறுத்த முன்வர வேண்டும் அல்லது உங்கள் அலுவலகங்களுக்கு முன்னால் நாங்கள் போராட்டங்களை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

கோட்டாபாய ராஜபக்ஷ காலத்தில் சந்தித்து இந்த விடயங்களை கூறி நாடாளுமன்றத்தில் பெரிது படுத்தி பேசிய போது தற்காலிகமாக நிறுத்துவதாக உத்தரவாதம் தந்தாலும் கூட இன்று முன்னரை விடத் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இன்று ரணில் விக்கிரமசிங்கவின் செல்லப்பிள்ளையாக நீங்கள் கருதி காப்பாற்றுகின்ற வேளையில் அவரின் ஆட்சிக் காலத்தில் இந்த இனவாத தமிழ்விரோத செயற்பாடுகள் அனைத்தும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்பது இன்று யதார்த்தம். எனவே நிதி உதவிசெய்யும் சர்வதேச நிறுவனங்கள் உடனடியாகக் கொடுக்கக் கூடிய நிதி உதவிகளை நிபந்தனைகளைப் போட்டு இங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்துகின்றதை செய்யவேண்டும்.

இந்தத் திட்டம் மக்களுக்குரிய அபிவிருத்தி வேலைத்திட்டமாக இருக்கவேண்டுமே தவிர இந்த மக்களை அப்புறப்படுத்தி அவர்களின் வாழ்வாதாரத்தை இல்லாமல் செய்து ஓர் இனழிப்பிற்கு வழிவகைக்கின்ற முறையில் அமையக்கூடாது. இதையும் அம்பலப்படுத்துவோம். எனவே இந்த விடயங்களை கருத்தில் கொண்டு சரியான வகையில் இங்கே பரம்பரையாக இருக்கக்கூடிய தமிழர் தாயகத்தில் இருக்ககூடிய உண்மையான சொந்தக்காரர்களுக்கு நீதிகிடைக்கவேண்டும்.

அதேவேளை எங்களுடைய உள்ளூராட்சி சபைகள் தவிசாளர் பதவிகளை வைத்துக் கொண்டு ஆட்சி அதிகாரங்களை வைத்துக் கொள் பவர்கள். இந்த சொந்த மக் களுக்கு இந்த நிலத்துக்குரிய உரிமையாளர்களுக்கு வந்து தொழிலை செய்வதற்கான போக்குவரத்துக்கு இந்த பாதைகளை சீர் செய்ய முடியாமல் இவ்வளவு காலமும் பாத்துக் கொண்டிருப்பது என்பது மிக மோசமான ஓர் அநியாயம்.

இந்த மக்கள் தங்களுக்கு பல அச்சுறுத்தல் மத்தியில் இந்த பிரதேசத்தில் தங்களுடைய உயிர்களை வைத்துக்கொண்டு பண்ணைகளை பராமரிப்பதென்பது ஒரு இலகுவான விடையமல்ல.

ஒருபக்கம் சிங்கள இனவாத அச்சுறுத்தல், இன்னொரு பக்கம் யானையால் அச்சுறுத்தல். இந்த மக்களுக்கு தேவைப்படுகின்ற உத்தரவாதங்களையும் உதவிகளையும் வசதிகளையும் செய்யாமல் தமிழ் பிரதேச சபைகள் இயங்குவது என்பது மன்னிக்க முடியாத ஒரு செயலாகும். – என்றார்.



## 12 ஆயிரம் ரூபா போலி நாணய தாள்களுடன் இருவர் கைது!

### கிண்ணியாவில் சம்பவம்

திருகோணாமலை கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பகுதியில் 12 ஆயிரம் ரூபா போலி நாணயத்தால்களுடன் இருவர் நேற்று (ஞாயிற்றுக் கிழமை) கைதுசெய்யப்பட்டுள் ளார் என கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

கிண்ணியாவில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இந்தப் போலி நாணயத் தாளை பயன்படுத்தி பொருள்கள் கொள்வனவு செய்ய முயற்சிக்கும் போது பொலிஸாருக்குக் கிடைத்த ரகசிய தகவலை அடுத்து போலி நாணயத்தாளைக் கொண்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் பெறப்பட்ட வாக்கு மூலத்தின் அடிப்படையில் கிண்ணியா உதவிப் பொலிஸ் அதிகாரி ராஜித குருசிங்கவின் தலைமையில் இடம்பெற்ற விசாரணைகளை அடுத்து இந்தப் போலி நாணயத்தாள்கள் அச்சிட்ட அச்சகத்தை சேர்ந்த மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

இருவரும் சேர்ந்து ஒரு லட்சம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்களை அச்சிடப்பட்டதாகவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரும் கிண்ணியா பெரியாற்று முனை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி நபர்களிடமிருந்து 12 ஆயிரம் ரூபா நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அச்சிடுவதற்கு பயன் படுத்தப்பட்ட கணினி மற்றும் அச்சு இயந்திரமும் கைப் பற்றப்பட்டுள்ளது.

இருவரையும் கிண்ணியா சுற்றுலா நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக கிண்ணியா பொலிஸ் நிலையப் பொருப் பதிகாரி பெர்னான்டோ குறிப்பிட்டார்.

இவ்வாறு போலியாக அச்சிடப்பட்ட 88 ஆயிரம் ரூபா பெறுமதியான நாணயத் தாள்கள் கிண்ணியாவில் புழக்கத்தில் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன் அவ்வாறான போலி நாணயத்தாள்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக செயல்படுமாறும் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## 150 போதை மாத்திரைகளுடன் கோண்டாவிலில் ஒருவர் கைது!



கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில், 150 போதை மாத்திரைகளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரி வினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொருளாதாரம், ஜனநாயகம் இரண்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு!

### நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் கருத்து



பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது அவசிய மற்றது என்ற நிலைப்பாட்டில் பெரும்பாலான மக்கள் உள்ளார்கள். பொருளாதாரம் மக்களின் ஜனநாயக உரிமை ஆகிய இரண்டையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கான நிதி விடுவிப்பு தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவை கௌரவமாக ஏற்றுக்கொள்கிறோம். நாட்டின் நிதி நிலைமை மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்குவதற்கான சிக்கல் நிலை ஆகியவற்றை உயர் நீதிமன்றத்துக்கு சத்திய கடதாசி ஊடாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

பொருளாதார மீட்சிக்காக அரசாங்கம் கடந்த ஆறு மாத காலமாக எடுத்த தீர்மானங்களால் நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை தற்போது வழமை நிலைக்கு திரும்பியுள்ளது. எதிர்தரப்பினர் குறிப்பிடுகின்றமை போன்று வரி அதிகரிக்காமல் இருந்திருந்தால் நாட்டில் மீண்டும் ஒரு பாரிய மக்கள் போராட்டம் தோற்றம் பெற்றிருக்கும்.

புதிய வரி கொள்கைக்கு மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் பெறும் தரப்பினர் தான் தற்போது போர்கொடி உயர்த்துகிறார்கள். நடுத்தர மக்கள் பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை எதிர்கொண்ட போது இவர்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை. பொருளாதார மீட்சிக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.


பொருளாதாரப் பாதிப் புக்கு மத்தியில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவது அவசியமா என நாட்டு மக்கள் கருதுகிறார்கள்.

நாட் டின் பொருளாதாரம், மக்களின் ஜனநாயக உரிமை ஆகிய இரண்டையும் பாதுகாக்க வேண் டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு.

பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கி ஜன நாயகத்தை பாதுகாக்க முடியாது. மக்களின் வாக்குரிமையை நெருக்கடிக்குள்ளாக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு கிடையாது.

தேர்தலை பிற்போட்டால் அது அரசாங் கத் திற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிவோம். – என்றார்.

## தொலைத்தொடர்பு கோபுரம் அமைக்க வட்டு மேற்கில் மக்கள் கடும் எதிர்ப்பு!



வட்டு. மேற்கு பகுதியில் தனியார் நிறுவனம் ஒன்றின் தொலைத்தொடர்பு கோபு ரத்தை அமைப்பதற்கு, மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வலி. மேற்கு பிரதேச சபையின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்தக் கடிதத்தின் பிரதியை விமானப் படை, பாதுகாப்பு அமைச்சு, சுற்றாடல் அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, வடக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் உள்ளவை வருமாறு –

வட்டு. மேற்கு, வட் டுக் கோட்டை கிராமத்தில், மூளாய் 4 ஆம் ஒழுங்கையில் தொலைத் தொடர்பு கோபுரம் அமைப்பதற்கு டயலொக் நிறுவனத்துக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பிரதேச சபையிடம் தொடர்புகொண்டு கேட்டபோது, பிரதேச சபையால் அனுமதி வழங்கப்பட்டதாக கூறப்பட்டது. டயலொக் நிறுவனத்தால் உரிய ஆவணங் கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கிராம பொது அமைப்புகளிடமும் அனுமதி, சம்மதக் கடிதம் பெறப்பட்டதாக பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இந்தக் கோபுரம் அமைக்கும் இடத்துக்கும், சம்மதக் கடிதம் வழங்கிய அமைப்புக்களுக்குமிடையில் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை.

அத்துடன் தொலைத் தொடர்பு கோபுரத்தை அமைப்பதற்கு காணியை வழங்கிய நபர் இந்தப் பிரதேசத்தில் இல்லை, அத்துடன் இந்தக் காணியின் உரிமையாளர் தன்னுடைய காணியில் இரண்டாவது கோபுரம் அமைப்பதற்கு வழங்கியுள் ளார். இரண்டு பிரதேசங்களில் அமைப்பதற்கு காணியை வழங்கியுள்ளார். அத்துடன் கோபுரம் அமைப்பது அயல் வீட்டாருக்குக் கூட தெரியாத வகையில் பணிகள் முடக்கி விடப்பட்டிருந்தன.

இந்தத் தொலைத்தொடர்பு கோபுரம் இந்தப் பிரதேச குடியிருப்பு பகுதியினுள் அமையவிருப்பதால் மக்கள் உடலியல் ரீதியான பாதிப்புகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படலாம். எனவே, இந்தக் கோபுரத்தை அமைப்பதற்கு பிரதேச மக்கள் எதிர்ப்பை வெளியிடுவதுடன், இதனை அமைப்பதை உடனடியாக இடைநிறுத்துமாறு வேண்டுகின்றோம். – ’ என்றுள்ளது.

## கனேடிய நிதி உதவியில் 100 ஆவது அறுவை சிகிச்சை!







கனடா – ரொரண்டோவை மையமாக கொண்டு இயங்கி வரும் செந்தில் குமரன் நிவாரண நிதியம் தனது 100 ஆவது இலவச இதய அறுவை சிகிச்சையை லங்கா மருத்துவமனையில் கொண்டாடியது.

இந்த நிகழ்வில், கொழும்பில் உள்ள கனேடிய தூதரகத்தின் உயர் அதிகாரி டானியல் பூட் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார்.

செந்தில் குமரன் நிவாரண நிதியம் பல காலம் இதய நோயுடன் போராடி வரும் நோயாளர்களுக்கு இலவச சத்திரசிகிச்சைகளை வழங்கி அவர்களின் உயிரைக் காப்பாற்றி வருகின்றது.

இந்த நிலையில், தங்களது வெற்றிகரமான 100 ஆவது இதய அறுவை சிகிச்சையை நிறைவு செய்ததை கொண்டாடும் வகையில் லங்கா மருத்துவமனையில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இச்சிறப்பு நிகழ்வைக் கொண்டாடும் வகையில், லங்கா வைத்தியசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட வசீகர விழாவிற்கு, கொழும்புவில் உள்ள கனேடிய தூதரகத்தின் உயர் அதிகாரி டானியல் பூட் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

கனடாவிலிருந்து திரு திருமதி செந்தில் குமரன், லங்கா மருத்துவமனையின் பிரதம நிறைவேற்று அதிகாரி தீப்தி லொகு ஆராச்சி, யாழ். போதனா வைத்தியசாலையின் இதய நிபுணர் குருபரன், இதய சத்திர சிகிச்சை நிபுணர் காந்திஜி மற்றும் பல மருத்துவர்களும், இந்தத் திட்டத்தால் பயனடைந்த பயனாளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

100 ஆவது பயனாளியான முகமாலையினை சேர்ந்த 12 வயது சிறுமியான வைஷ்ணவி சிறப்பு விருந்தினரை மாலையிட்டு கௌரவப்படுத்தினார். இது பலருக்கு நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

மருத்துவக் குழுவினரையும், செந்தில் குமரனின் இந்த சேவையினையும் திரு டானியல் பூட் வாழ்த்தி உரையாடியதோடு மருத்துவ குழுவினருக்கு பாராட்டு பத்திரங்களை வழங்கி கௌரவித்தார்.

இந்த திட்டத்தால் பயன் பெற்ற அநேகர் இலங்கை முழுவதிலும் இருந்து வருகை ததந்திருந்தமை சிறப்பம்சமாகும்.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கஸ்தூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் தீர்வு வேறு அதிகாரப் பகிர்வு வேறா?

காலத்தை இழுத்தடிக்காமல் மூவின மக்களும் ஏற்கும் அரசியல் தீர்வை இவ்வருடத்துக்குள் அரசு வழங்கியே தீரவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்திருக்கிறார். தேர்தல் சூட்டோடு, சர்ச்சைகளோடு மீண்டும் மறக்கப்பட்ட விடயமாகிவிட்ட அரசியல் தீர்வு குறித்து அவரது கருத்து கவனத்தை ஈர்த்திருக்கிறது.

தேர்தல் என்று கூறி அரசியல் தீர்வுக்கான சர்வகட்சிப் பேச்சைப் புறக்கணிக்கவோ அல்லது அந்தப் பேச்சை ஒத்திவைக்கவோ முடியாது என்றும் ராஜித சுட்டிக்காட்டியுள்ளார் என்பதும் கவனிக்கத்தக்கது. அதேநேரம் அவர் தெரிவித்திருக்கக்கூடிய வேறு சில கருத்துகள் வியப்பளிக்கின்றன.

அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் நானும் பங்கேற்றேன். அரசியல் தீர்வு வேண்டும் என்பதில் அனைத்துக் கட்சியினரும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளனர். இது வரவேற்கத்தக்கது. ஆனால், அதிகாரப் பகிர்வு தொடர்பில்தான் ஒவ்வொரு கட்சியினரும் வெவ்வேறு நிலைப்பாடுகளில் உள்ளனர். அரச தலைவர் கூறியது போல் அதிகாரப் பகிர்வு தொடர்பில் நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் முரண்பாடுகள் இல்லாத – ஒருமித்த முடிவை எடுக்கவேண்டும் – என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் அனைவரும் ஒருமித்த கருத்து உடையவர்களாக இருந்தால் அதிகாரப் பகிர்வை விடுத்து அது எப்படிச் சாத்தியமாகும்? அதிகாரங்கள் பகிரப்படுவதுதான் தீர்வு என்பதே. அதற்காகத்தான் தமிழ் இனம் அறவழி, வன்முறை வழி மீண்டும் அறவழி என்று தொடர்ந்து போராடி வருகின்றது.

முன்னாள் அமைச்சர் ராஜித குறிப்பிடுவதைப் போன்று தீர்வைக் காண்பதில் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டில் உண்மையில் இருப்பார்களானால் அவர்கள் அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பில் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரக்கூடியவர்களாக இருப்பார்கள். ஆனால் அனைத்துக் கட்சிக் கூட்டங்களில் கலந்துகொள்பவர்களிடம் அத்தகைய ஒருமைப்பாடு இருப்பதாகத் தெரியவில்லை. அங்கே அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தைக்கூட வழங்கக்கூடாது என்பவர்களில் தொடங்கி, ஒற்றையாட்சிக்குள்தான் அதிகாரப் பகிர்வு என்று சொல்பவர்கள் ஊடாக முழுமையான அதிகாரப் பகிர்வுக்கு இணங்குபவர்கள் வரை பல்வேறு தரப்பினராக சிங்களவர்கள் பிரிந்து நிற்கிறார்கள். அதனைச் சில வாரங்களுக்கு முன்னர்கூட கண்கூடாகக் காண முடிந்தது.

அப்படியிருக்கும்போது இவர்கள் அனைவரும் தீர்வு காணப்படவேண்டும் என்கிற விடயத்தில் ஒருமித்த நிலைப்பாட்டில் இருக்கிறார்கள் என்பது முழுப் பொய். காலங் காலமாக சிங்களத் தரப்பு இப்படித்தான் ஏமாற்றி வருகின்றது. இங்கு தீர்வும் அதிகாரப் பகிர்வும் வேறு வேறானவை அல்ல. அதிகாரப் பகிர்வுக்கு சிங்களத் தரப்புகள் இணங்கிக் கொண்டால் மட்டுமே இங்கு தீர்வு சாத்தியம்.

# செலவு ஒழுங்கு வரிசையில் மாற்றம் ஏற்பட்டால் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடும்!

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கருத்து

அரசாங்கத்தின் செலவு ஒழுங்குவரிசையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டி ஏற்பட்டால் பொருளாதார முகாமைத்துவம் செய்வதில் சிக்கலுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

தேர்தலுக்கு நிதி ஒதுக்காமல் வந்த நிதி அமைச்சின் தீர்மானத்துக்கு உயர்நீதிமன்றம் வழங்கி இருக்கும் இடைக்கால தடை உத்தரவு தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டர்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடு பொருளாதார ரீதியில் சிக்கலான நிலைக்கு முகம்கொடுத்திருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், நாட்டின் வருமானத்துக்கு அமைய செலவு ஒழுங்குவரிசை ஒன்றை அமைத்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இவ்வாறான நிலையில் செலவு செய்யும் ஒழுங்கு–வரிசையை மாற்றவேண்டி ஏற்பட்டால் பொருளாதார முகாமைத்துவம் செய்வதில் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகிறது.

நாட்டில் இந்த வருடத்துக்கு செலவிட வேண்டிய அனுமதிக்கப்பட்ட பல விடயங்கள் பாரியளவில் புத்தகத்தில் இருக்கின்றன. என்றாலும் எமது மறை பொருளாதாரத்தில், செலவிடுவதில் ஒழுங்கு வரிசை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு செலவழித்து வருவதாலே மக்கள் கடந்த காலங்களில் அத்தியாவசிய பொருள்களை பெற்றுக் கொள்ள இருந்துவந்த வரியையை இல்லாமலாக்கி இருக்கிறோம்.

ஆனால் தற்போது நாங்கள் பின்பற்றிவரும் செலவிடும் இந்த ஒழுங்கு வரிசையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டி ஏற்பட்டால். மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள், விவசாயிகளுக்கு தேவையான உரம் மற்றும் ஏனைய அத்தியாவசிய தேவைகளுக்கு செலவிடுவதில் சிக்கல் ஏற்படும்.



அத்துடன் இந்த மாதத்தில் சமுர்த்தி கொடுப்பனவு, பாடசாலை அச்சுப்புத்தகம் அச்சிடுதல், நெல் கொள்வனவு, அரச ஊழியர்களுக்கான சம்பளம் மற்றும் ஓய்வூதியம் சலுத்து தல் போன்ற விடயங்களுக்குத் தலா ஒரு கோடி ரூபாவுக்கு மேல் செலவிட வேண்டி இருக் கிறது. அதே போல் உரம் கொள் வனவு செய்வதற்கு செலவிட வேண்டி இருக்கிறது. 50 கோடி ரூபாவுக்கு அதிகம் செலவிட வேண்டிய பொருள்களுக்கு திறைசேரி பிணைமுறி மூலம் வழங்கி வருகிறோம். இவ்வாறே எமது செலவு நடவடிக்கைகளைத் தற்போது முகாமைத்துவம் செய்து வருகிறோம். இந்நிலையில் இந்த செலவு ஒழுங்கு–வரியில் மாற்றம் ஏற்பட்டால் பாரிய பிரச்சினைகளுக்கு எமக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும். – என்றார்.

# உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்த மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்!

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கோரிக்கை

தேசிய தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர் வரும் 19 ஆம் திகதி நடத்த வேண்டும்.

தேர்தல் இடம்பெற்றால் மக்கள் வழங்கக்கூடிய மக்களாணையைக் கொண்டு நாடாளுமன்றத்தில் இருக்கும் தற்போதுள்ள கூட்டம் தொடர்ச்சியாக ஆட்சியதிகாரங்களில் இருக்க முடியாத நிலை தோன்றும்.

இவ்வாறானதொரு நிலையை உருவாக்குவதற்காகவேனும் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.



திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டிருந்த போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

உயர்நீதிமன்றம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான நிதியை ஒதுக்கு–வதை அரசாங்கம் தடுக்கக்கூடாது என்று இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்துள்ள நிலையில் அதன் பிரகாரம், உடனடியாக தேர்தல் நடைபெற வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

உண்மையில் நாடாளுமன்ற தேர்தல் தான் தற்போதைய சூழ்நிலையில் முக்கியமான ஒன்றாகும். காரணம், இன்று நாடாளுமன்றத்தில் உள்ள அனைவரும் நீக்கப்பட வேண்டும் என்ற மனநிலையில் மக்கள் இருக்கிறார்கள்.

இந்நிலையில் எதிர்காலத்தில் மக்கள் விரும்பும் நபர்களை நேரடியாகத் தெரிவுசெய்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதன் மூலம் ஊழல், மோசடிகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கும், எதிர்காலத்தில் தவறான முடிவுகள் எடுக்கப்படாமல் இருப்பதைத் தடுத்து நிறுத்தவும் நாம் பொதுத் தேர்தலுக்குச் செல்ல வேண்டும்.

இருப்பினும், நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள தற்போதைய சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெற்றாலும் ஊழல், மோசடிகளில் ஈடுபடாத தரப்பினரை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும்.

இதேவேளை, தேர்தல் இடம்பெற்றால் மக்கள் வழங்கக்கூடிய மக்களாணையைக் கொண்டு நாடாளுமன்றத்தில் இருக்கும் தற்போதுள்ளவர்கள் தொடர்ச்சியாக இருக்க முடியாத நிலை தோன்றும்.

இவ்வாறானதொரு நிலையை உருவாக்கவேனும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும். இதற்கு மக்கள் தீவிரமாக அழுத்தம் கொடுக்க வேண்டும். அதற்கான தயார்ப்படுத்தலை மக்கள் முன்னெடுக்க வேண்டும். இந்நிலையில் நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, தேசிய தேர்தல் ஆணைக்குழு எந்தவிதமான தயக்கங்களும் இல்லாமல் சட்ட ரீதியாக எதிர்வரும் 19ஆம் திகதி தேர்தலை நடத்த வேண்டும். இந்த திகதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். – என்றார்.

### கடற்றொழிலாளர்களுக்கான

# வடக்கு எம்.பிக்கள் இணைவால் அமைச்சர் டக்ளஸ்க்கு மகிழ்ச்சி

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந் திருப்பது மகிழ்ச்சியளிப்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த செயற்பாடு தன்னுடைய முயற்சிகளுக்கு வலுச்சேர்க்கும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இந்தியக்கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய எல்லை தாண்டிய சட்டவிரோத தொழில் முறைக்கு எதிராக, கடற்றொழிலாளர்களின் நலனில் அக்கறையுள்ள சிலரால் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த அங்கஜன் இராமநாதன் ஆகிய வடக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில், இந்தியக் கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு எந்த வகையிலும் அனுமதிப்பதில்லை என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதுடன், இதுதொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அறிவிப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்து தெரிவித்த போதே இதனை தெரிவித்த கடற்றொழில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

'எமது வளங்களையும் எமது மக்களின் வாழ்வாதாரங்களையும் அழிக்கின்ற இந்திய கடற்றொழிலாளர்களின் சட்ட விரோத தொழில்முறைகள் முழுமையாக நிறுத்தப்பட வேண்டும் என்பதில் தொடர்ச்சியாக இறுக்கமான நிலைப்பாட்டை வெளிப்படுத்திவருகின்றேன்.



அதனைக் கட்டுப்படுத்துவதற்காக இராஜதந்திர ரீதியாகவும், சட்ட ரீதியாகவும், கச்சதீவு சந்திப்புக்கள் போன்று நட்பு ரீதியாகவும் தொடர்ச்சியாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்திருப்பதை நம்பிக்கையளிக்கும் செயற்பாடாகவே நான் பார்க்கின்றேன்.

ஏற்கனவே, கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை எனப்படும் கடலட்டை வளர்ப்பு, கடல்பாசி வளர்ப்பு மற்றும் பண்ணை முறையிலான கடலுணவு வளர்ப்பு முயற்சிகளுக்கு கடற்றொழிலாளர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கி வருகின்ற நிலையில், இன்றைய ஒன்றிணைந்த சந்திப்பும் இடம்பெற்றுள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான ஒன்றிணைவுகள் தொடர வேண்டும்.

எமது மக்கள் நலன் சார்ந்த விடயங்களில் எமது மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியல் நலன்களுக்கு அப்பால் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். - என்றார்.

# பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டை 8ஆவது ஆண்டாக அதிகாித்தது சீனா

சீன பாதுகாப்புத் துறைக்கான இந்த ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு 7.2 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 1.55 ட்ரில்லியன் யுவான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து 8ஆவது ஆண்டாக பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கீட்டைச் சீனா உயர்த்தியுள்ளது.

சீன நாடாளுமன்றத்தின் வருடாந்திர கூட்டத்தொடர் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இந்தக் கூட்டத்தொடரில் அந்த நாட்டு நிதியமைச்சகம் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில், நிகழாண்டு சீன பாதுகாப்புத் துறைக்கான ஒதுக்கப்பட்டு 7.2 சதவீதம் அதிகரிக்கப்பட்டு 1.55 ட்ரில்லியன் யுவான் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 1.45 ட்ரில்லியன் யுவானைவிட இது சற்று அதிகம்.

அதேவேளையில், தொடர்ந்து 8ஆவது ஆண்டாக அத்துறைக்கான நிதி ஒதுக்கீட்டை சீனா உயர்த்தியுள்ளது.

சீனப் பிரதமர் லீ கெகியாங் நாடாளுமன்றத்தில் பேசுகையில், 1927ஆம் ஆண்டு சீன மக்கள் படை தோற்றுவிக்கப்பட்டது. அதன் 100ஆவது ஆண்டு 2027இல் கொண்டாடப்பட உள்ளது. ராணுவப் படையின் நூற்றாண்டு இலக்குகளை பாதுகாப்புப் படைகள் கவனத்தில் கொள்ளவேண்டும். நாட்டின் ஆளுங்கட்சியான சீன கம்யூனிஸ்ட் கட்சியும் மக்களும் பாதுகாப்புப் படைகளிடம் ஒப்படைத்துள்ள பணிகளை நிறைவேற்றும் வகையில், தனது செயல்பாடுகளை பாதுகாப்புப் படைகள் மேற்கொள்ளவேண்டும். போர்ச் சூழலுக்கான தயார் நிலையையும், ராணுவத் திறன்களையும் அப்படைகள் அதிகரிக்கவேண்டும். அனைத்து வகையிலும் ராணுவ செயல்பாட்டை வலுப்படுத்த ஒருங்கிணைந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்' என்றார்.

5 சதவீத வளர்ச்சிக்கு இலக்கு: சீன அரசு மேற்கொண்ட பணிகள், அந்த அரசின் இலக்குகள் ஆகியவை அடங்கிய அறிக்கையை பிரதமர் லீ கெகியாங் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த அறிக்கையின்படி, நிகழாண்டு சீனா சுமார் 5 சதவீதம் பொருளாதார வளர்ச்சி காண இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலகில் மிகப் பெரிய பொருளாதார நாடுகளில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.

கொரோனா பரவலின் பாதிப்பால் கடந்த ஆண்டு அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3 சதவீதமாக சரிந்தது.

சீனாவைப் பொருத்தவரை நாடாளுமன்றத்துக்கு பெரிய அளவில் அதிகாரம் எதுவும் இல்லை. வரவு செலவுத் திட்ட ஒப்புதல், பதவி நியமனங்களுக்கான ஒப்புதல், முக்கிய மசோதாக்கள் மீதான வாக்களிப்பு ஆகியவற்றுக்காக மட்டும் நாடாளுமன்ற வருடாந்திர கூட்டத்தொடர் நடைபெறும். இதன் காரணமாக சீன நாடாளுமன்றம் ரப்பர் ஸ்டாம்ப்' என்றழைக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒக்டோபரில் நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில், கட்சியின் பொதுச் செயலராக மூன்றாவது முறையாக ஷி ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொடர்ந்து 3ஆவது முறை அதிபராக அவரின் பதவிக் காலம் தொடங்க உள்ள நிலையில், தற்போது நாடாளுமன்ற வருடாந்திர கூட்டத்தொடர் தொடங்கியுள்ளது.

கடந்த ஆண்டு அரசியலில் இருந்து ஓய்வுபெற உள்ளதாக சீன பிரதமர் லீ கெகியாங் அறிவித்தார். 10 ஆண்டுகளாகப் பிரதமர் பதவி வகிக்கும் அவர், சீன அரசின் பணிகள் மற்றும் இலக்குகள் அடங்கிய தனது கடைசி அறிக்கையை நாடாளுமன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்தார்.

தற்போதைய அரசின் பதவிக் காலம் விரைவில் நிறைவடைய உள்ளது' என்றார். இதன் மூலம் அவரின் பதவிக்காலம் விரைவில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பொருளாதார நிபுணரான லீ கெகியாங், ஆட்சி புரிவதில் அதிக அதிகாரம் கொண்டிருந்த முந்தைய பிரதமர்களைப் போல் அல்லாமல், பெரும்பாலும் சீன பொருளாதாரத்தை நிர்வகிப்பதில் கவனம் செலுத்தினார்.

புதிய பிரதமர் ஜின்பிங்கின் விசுவாசி?: முக்கிய அரசுப் பதவிகளுக்கான நியமனங்கள் தொடர்பாக கூட்டத்தொடரில் அறிவிப்பு வெளியிடப்படும் என்று கூறப்படுகிறது.

அந்தப் பதவிகளில் ஷி ஜின்பிங்கின் விசுவாசிகள் நியமிக்கப்பட உள்ளதாகத் தெரிகிறது.

இந்நிலையில், சீனாவின் புதிய பிரதமராக ஷி ஜின்பிங்கின் விசுவாசியும், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவருமான லீ கியாங் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகில் பாதுகாப்புத் துறைக்கு அதிக நிதி ஒதுக்கும் நாடுகளில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. நிகழாண்டு அந்நாட்டு பாதுகாப்புத் துறைக்கு 816 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கு அடுத்த இடத்தில் சீனா உள்ளது.

## இந்தோனேசிய எண்ணெய் கிடங்கு

# தீ விபத்தில் இறந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு



இந்தோனேசியாவில் உள்ள அரசுக்குச் சொந்தமான எண்ணெய்க் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை 19ஆக அதிகரித்தது.

வடக்கு ஜகார்த்தாவுக்கு அருகே மக்கள் நெருக்கடி மிகுந்த தனா மேரா என்னும் இடத்தில் அரசு நிறுவனமான பொட்மினாவுக்கு சொந்தமான பிளமபாங்க் எண்ணெய்க் கிடங்கு உள்ளது. இந்த எண்ணெய்க் கிடங்கில் வெள்ளிக்கிழமை தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து 2 மணி நேரத்தில் அருகில் உள்ள பகுதிகளுக்கு தீ வேகமாகப் பரவியது. தீயணைப்பு வீராகள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

விபத்து நிகழ்வதற்கு முன் பாக கடுமையான பெட்ரோல்நெடிகாற்றில்பரவியதாகவும், இதனால் சிலருக்கு வாந்தி போன்ற பாதிப்புகள் ஏற்பட்டதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர். இதைத் தொடாந்து பெரும் வெடிப்பு ஒலி கேட்டது. கரும்புகை மண்டலத்தில் மக்கள் பதற்றத்துடன் வெளியேறும் விடியோக்கள் வெளியாகி உள்ளன.

இந்த விபத்தில் சனிக்கிழமை வரை 16 போ உயிரிழந்த நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை 19ஆக அதிகரித்தது. பாதிக்கப்பட்ட 35 போ மருத்துவமனைகளில்சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரது உடல் நிலை மோசமானநிலையில்உள்ளது. காணமால்போன 3 பேரைத் தேடும் பணியில் தீயணைப்பு வீராகள் ஈடுபட்டுள்ளனா.

தீ விபத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை அதிபா ஜோகோ விடோடோ ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டார். மக்களுக்குத் தேவையான உதவிகளை அரசு வழங்கும் என அவா உறுதியளித்தார்.





# பாக். படையினர் மீது தாக்கு 9 பேர் இறப்பு; 13 பேர் காயம்

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் திங்கள் கிழமை நடந்த தற்கொலைப் படை தாக்குதலில் 9 பாதுகாப்புப்படையினர் உயிரிழந்தனர். 13 பேர் காயமடைந்துள்ளனர்.

குவெட்டா சிபி நெடுஞ்சாலையில் உள்ள காம்ப்ரி பாலத்தில் பலுசிஸ்தான் காவலர்களின் வாகனம் அருகே இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்துள்ளது.

இது தற்கொலைத் தாக்குதல் என்று கச்சியின் மூத்த காவல் கண்காணிப்பாளர் மெஹ்மூத் நோட்ஜாய் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் உள்ளூர் நிர்வாகமும், பாதுகாப்புப் படையினரும் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

பலுசிஸ்தான் பாதுகாப்புப் பணியாளர்கள் பணி முடிந்து திரும்பும்போது இந்த குண்டு வெடிப்பின் காரணமாக வாகனம் கவிழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களின் உடல்கள் மற்றும் காயமடைந்த பணியாளர்கள் சிபி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டனர். அங்கு அவர்களுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டது.

காயமடைந்தவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கைபர் பக்துன்க்வா மாகாணம் மற்றும் ஆப்கானிஸ்தானின் எல்லையோரப் பகுதிகளில் பாகிஸ்தான் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்களின் பின்னணியில் இந்தக் குண்டு வெடிப்பு நிகழ்ந்துள்ளது.

# பெருங்கடல் பாதுகாப்புக்காக உலக ஒப்பந்தம் கைச்சாத்து

உலகின் பெருங்கடல்கள் மற்றும் அதன் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாக்கும் உடன்படிக்கையில் ஐ.நா. உறுப்பு நாடுகள் ஞாயிற்றுக்கிழமை கையெழுத்திட்டன.

நியூயார்க்கில் நடைபெற்ற இதுதொடாபான பேச்சின் முடிவில் உறுப்பு நாடுகள் இந்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையின்படி, 2030ஆம் ஆண்டுக்குள் பெருங்கடல்களின் 30 சதவீத பகுதி பாதுகாக்கப்பட்ட பகுதியாக மாற்றப்படும்.

அந்தப் பகுதிகளில் மீன்பிடிப்பு, கப்பல் போக்குவரத்து, ஆழ்கடல் சுரங்கம் போன்ற செயல்பாடுகள் தடைசெய்யப்படும்.

2007ஆம் ஆண்டுமுதல் நடைபெற்று வந்த இந்தப் பேச்சு தொடாந்து தடைபட்டு வந்த நிலையில் இப்போது உடன்படிக்கை கையொப்பமாகியுள்ளது.

# இம்ரான் கான் தலைமறைவு

## கைது செய்ய தேடுகிறது பொலிஸ்

வெளிநாட்டு தலைவர்கள் வழங்கிய பரிசு பொருட்களை விற்ற விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானைக் கைது செய்ய நீதிமன்றம் கைதாணை (வாறண்ட) பிறப்பித்துள்ளது. பொலிஸார் கைது செய்ய சென்றபோது, அவர் தலைமறைவாகிவிட்டார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் இம்ரான் கான், 1996ம் ஆண்டில் பாகிஸ்தான் தெஹ்ரீக்-இ-இன்சாப் கட்சியை (பிடிஐ) தொடங்கினார். 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் பிடிஐ கட்சி ஆட்சியைப் பிடித்தது. அந்த நாட்டின் 22ஆவது பிரதமராக இம்ரான் கான் பதவியேற்றார்.

பாகிஸ்தானில் விலைவாசி உயர்ந்து கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதால் அவரது அரசுக்கு அளித்து வந்த ஆதரவை கூட்டணி கட்சிகள் வாபஸ் பெற்றன. இதன் காரணமாக கடந்த ஆண்டு ஏப்ரலில் இம்ரான் கான் ஆட்சி கவிழ்ந்தது.



அவர் பிரதமராக இருந்தபோது பல்வேறு வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்தார். அப்போது வெளிநாடுகளின் தலைவர்கள், இம்ரான் கானுக்கு விலை உயர்ந்த பரிசுப் பொருட்களை வழங்கினர். பாகிஸ்தான் சட்ட விதிகளின்படி பிரதமருக்கு அளிக்கப்படும் பரிசுப் பொருட்களை கருவூலத்தில் ஒப்படைக்க வேண்டும்.

ஆனால், இம்ரான் கான் பரிசுப் பலவற்றை முறைகேடாக விற்றுவிட்டார் என்று புகார் எழுந்தது. இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தேர்தல் ஆணையத்தில் இம்ரான் கான் அளித்த விளக்கத்தில், "கருவூலத்தில் இருந்த பரிசு பொருட்களை ரூ.2.15 கோடிக்கு வாங்கினேன். அவற்றை ரூ.5.8 கோடிக்கு விற்பனை செய்தேன் என்று தெரிவித்தார்.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் இம்ரான் கான் 3 முறை ஆஜராகவில்லை. இதைத் தொடர்ந்து அவரை கைதுசெய்யபிணையில்வெளிவரமுடியாத கைதாணையை நீதிமன்றம் பிறப்பித்தது.

உடனடியாக செயல்பட்ட இஸ்லாமாபாத் பொலிஸார், லாகூரில் உள்ள இம்ரான் கான் வீட்டுக்கு நேற்று மதியம் சென்றனர். அங்கு அவர் இல்லை. அடுத்த சில மணி நேரங்களில் லாகூரில் உள்ள ஜாமன் பூங்காவில் அவர் திடீரென தோன்றி பேசினார். அங்கு பொலிஸார் விரைந்து சென்றனர். ஆனால் பிடிஐ கட்சி தொண்டர்கள் பொலிஸாரை உள்ளே அனுமதிக்கவில்லை. அங்கிருந்தும் இம்ரான் கான் தப்பிவிட்டார்.

இது குறித்து இஸ்லாமாபாத் பொலிஸார் கூறும்போது, "இம்ரான்கான் தலைமறைவாக இருக்கிறார். அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. அவரைக் கைது செய்யவிடாமல் கட்சித் தொண்டர்கள் தடுக்கின்றனர். விரைவில் அவர் கைது செய்யப்படுவார்" என்று தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் மீண்டும் சூடு விருந்தில் 2 பேர் உயிரிழப்பு

அமெரிக்காவில் விருந்தின்போது நிகழ்த்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் ஜார்ஜியாவின் டக்ளஸ் கவுண்டியில் உள்ள வீடு ஒன்றில் சனிக்கிழமை விருந்து நடைபெற்றது. இந்நிகழ்விற்காக 100க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அங்கு கூடியிருந்தனர். அப்போது ஒருவர் துப்பாக்கியால் சுட்டத்தில் 2 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த காவல்துறையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இருப்பினும் இந்நிகழ்வு தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

வீட்டில் நடந்த விருந்தில் ஏற்பட்ட மோதலால் துப்பாக்கிச்சூடு நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பரபரப்பானதொரு ஆட்டத்தில் குஜராத்தை வீழ்த்தியது யுபி

மகளிர் ப்ரீமியர் லீக் தொடரில் பரபரப்பான ஆட்டம் ஒன்றில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது யூபி வோரியர்ஸ் அணி.

அந்த அணிக்காக 8ஆவது விக்கெட்டிற்கு கிரேஸ் ஹாரிஸ் மற்றும் சோஃபி எக்லெஸ்டோன் இணைந்து 70 ஓட்டகளுக்கு இணை அமைத்தனர். அது அந்த அணிக்கு வெற்றி கூட்டணியாக அமைந்தது.

5 அணிகள் பங்கேற்று விளையாடி வரும் முதலாவது மகளிர் ப்ரீமியர் லீக் சீசன் சனிக்கிழமை தொடங்கியது. இந்தத் தொடரின் மூன்றாவது போட்டியில் குஜராத் ஜெயண்ட்ஸ் மற்றும் யூபி வோரியர்ஸ் அணிகள் ஞாயிறு அன்று விளையாடின. இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற குஜராத் அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அந்த அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 விக்கெட்டுகள் இழப்பிற்கு 169 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணிக்காக அதிகபட்சமாக ஹர்லீன் தியோல், 32 பந்துகளில் 46 ஓட்டங்கள் எடுத்திருந்தார். மேகனா 24 ஓட்டங்கள், ஆஷ்லே கார்ட்னர் 25 ஓட்டங்கள் மற்றும் ஹேமலதா 21 ஓட்டங்கள் எடுத்திருந்தனர். 170 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை வோரியர்ஸ் அணி விரட்டியது.

கிரண் நவ்கிரே, 43 பந்துகளில் 53 ஓட்டங்கள் எடுத்து அவுட்டானார். 15.4 ஓவர்கள் முடிவில் வோரியர்ஸ் அணி 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 105 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தது. அப்போது டைம் அவுட் அறிவிக்கப்பட்டது.

அங்கிருந்து ஆட்டத்தை அப்படியே மாற்றினார் அந்த அணியின் வீராங்கனை கிரேஸ் ஹாரிஸ். சோஃபி எக்லெஸ்டோனும் அவருக்கு உதவியாக ஓட்டக் குவிப்பில் வேகத்தை கூட்டினார். ஆட்டத்தின் முடிவில் 26 பந்துகளில் 59 ஓட்டங்களை எடுத்திருந்தார் கிரேஸ் ஹாரிஸ். 7 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள் இதில் அடங்கும்.

12 பந்துகளில் 22 ஓட்டங்கள் எடுத்திருந்தார் சோஃபி எக்லெஸ்டோன். தனது அதிரடி ஆட்டத்தின் மூலம் அபாரமாக ஆட்டத்தை பினிஷ் செய்தார் கிரேஸ்.

19.5 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 175 எடுத்து வெற்றி பெற்றது வாரியர்ஸ் அணி. நடப்பு சீசனில் குஜராத் அணி இதுவரை 2 போட்டிகளில் விளையாடி இரண்டிலும் தோல்வியை தழுவியுள்ளது. இந்தப் போட்டியில் பிளேயர் ஆப் தி மேட்ச் விருதையும் கிரேஸ் ஹாரிஸ் வென்றிருந்தார்.



# டெல்லி கேபிடல்ஸ் 60 ஓட்டங்களால் வெற்றி



மகளிர் பிரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் போட்டியின் (டபிள்யூபிஎல்) லீக் ஆட்டத்தில் டெல்லி கேபிடல்ஸ் அணி 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணியை வீழ்த்தியது.

டபிள்யூபிஎல் கிரிக்கெட் போட்டி சனிக்கிழமை தொடங்கியது. இரவு நடைபெற்ற முதல் லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி 143 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியை அபாரமாக வென்றது. இந்நிலையில் ஞாயிறு மாலை 3.30 மணிக்கு மும்பை பிரபோர்ன் மைதானத் தில் டெல்லி கேபிடல்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிகள் விளையாடின.

முதலில் விளையாடிய டெல்லி மகளிர் அணி 20 ஓவர்களில் 2 விக்கெட் இழப்புக்கு 223 ஓட்டங்களைக் குவித்தது. டெல்லி அணியின் தலைவராக மெக் லேனிங் 43 பந்துகளில் 72 ஓட்டகளை அதிரடியாகக் குவித்தார். இதில் 14 பவுண்டரிகள் அடங்கும். மற்றொரு தொடக்க வீராங்கனையான பாலி வர்மா 45 பந்துகளில் 84 ஓட்டங்களை விளாசினார். இதில் 10 பவுண்டரிகளும், 4 சிக்ஸர்களும் அடங்கும்.

மரிஜான் காப் 39 ஓட்டங்களும், ரோட்ரிக்ஸ் 22 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். பெங்க–ளூரு அணி தரப்பில் ஹீத்தர் நைட் 2 விக்கெட்களைச் சாய்த்தார்.

பின்னர் 224 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் விளையாடிய பெங்களூரு அணி 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 163 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதையடுத்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி அணி வெற்றி பெற்றது.

பெங்களூரு அணி சார்பில் கேப்டன் ஸ்மிருதி மந்தனா அதிகபட்சமாக 35 ஓட்டங்கள் சேர்த்தார். எலிஸ் பெர்ரி 31, ஹீத்தர் நைட் 34, மேகன் ஷுட் 30 ஓட்டங்கள் எடுத்தனர். மற்றவர்கள் சோபிக்காததால் பெங்களூரு அணி தோல்வி கண்டது.

டெல்லி அணி தரப்பில் தாரா நோரிஸ் அபாரமாக பந்துவீசி 29 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளைச் சாய்த்தார். அலிஸ் கேப்சி 2 இலக்குகளையும், ஷிகா பாண்டே ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். தாரா நோரிஸ் ஆட்ட நாயகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

# நான்காவது டெஸ்டிலும் கம்மின்ஸ் இல்லை

இந்தியா வந்துள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி ஆமதாபாத்தில் கடைசி டெஸ்ட் ஆடவுள்ளது. ஏற்கனவே மூன்றாவது ஆட்டத்தில் இருந்து விலகிய ஆஸி. அணித் தலைவர் பட் கம்மின்ஸ் விலகியுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2–1 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்தூரில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டை ஆஸ்திரேலியா வென்றது.

தனது தாயாருக்கு உடல்நிலை சரியில்லாததால் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்பினார் ஆஸி. தலைவர் பட் கம்மின்ஸ்.

இதனால் 3ஆவது டெஸ்டில் அவர் விளையாடவில்லை. ஸ்டீவ் ஸ்மித் தலைமைப் பொறுப்பை ஏற்று அணிக்கு வெற்றியைத் தேடித் தந்தார். இந்நிலையில் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பி வர முடியாத சூழலால் 4ஆவது டெஸ்டையும் தவறவிடுகிறார் கம்மின்ஸ். இதனால் 4ஆவது டெஸ்டிலும் ஆஸி. அணியின் தலைவராக ஸ்டீவ் ஸ்மித் செயல்படவுள்ளார்.

முழு நேர அணித் தலைவர் பொறுப்பில் தனக்கு விருப்பமில்லை எனக் கூறியுள்ளார் ஸ்மித். "என்னுடைய காலம் முடிந்து விட்டது. இது பட் கம்மின்ஸின் அணி" என்றார் ஸ்மித். கம்மின்ஸ் அணித் தலைவரான பிறகு ஆஸி. அணிக்கு 4ஆவது முறையாகப் பொறுப்பேற்கவுள்ளார் ஸ்மித்.

டெஸ்ட் தொடருக்கு அடுத்ததாகத் தொடங்கவுள்ள இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் கம்மின்ஸ் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிகிறது.

பணிச்சுமை காரணமாக ஐபிஎல் போட்டியிலும் கம்மின்ஸ் பங்கேற்கவில்லை.

ஜுன் மாதத்தில், உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் போட்டியின் இறுதிச்சுற்று, ஆஸ் தொடர் போன்ற முக்கியமான போட்டிகளில் கம் மின்ஸ் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒருநாள் தொடரிலிருந்து ரிச்சர்ட்சன் விலகினார்

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரிலிருந்து ஆஸ்திரேலியாவின் பிரபல வீரர் ஜை ரிச்சர்ட்சன் விலகினார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2–1 என முன்னிலை வகிக்கிறது இந்திய அணி. இந்தூரில் நடைபெற்ற 3ஆவது டெஸ்டை ஆஸ்திரேலியா வென்றது.

ஆமதாபாத்தில் நடைபெறும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்டுக்குப் பிறகு 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடர் மார்ச் 17 அன்று தொடங்குகிறது. கடைசி ஒருநாள் ஆட்டம் மார்ச் 22 அன்று சென்னையில் நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஜை ரிச்சர்ட்சன், காயம் காரணமாக ஒரு நாள் தொடரிலிருந்து விலகியுள்ளார். கடந்த ஜனவரி மாதம் பிபிஎல் போட்டியில் விளையாடிய போது ஜை ரிச்சர்ட்சனுக்கு கால் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதிலிருந்து மீண்டு வந்ததால் ஒரு நாள் அணியில் சேர்க்கப்பட்டார். எனினும் காயத்தினால் உண்டான பாதிப்பு மீண்டும் ஏற்பட்டிருப்பதால் தற்போது ஒருநாள் தொடரிலிருந்து விலகியுள்ளார்.



மேலும் ஐபிஎல் போட்டியில் ஜை ரிச்சர்ட்சனால் விளையாடுவது சந்தேகம் என அறியப்படுகிறது. ஐபிஎல் ஏலத்தில் ஜை ரிச்சர்ட்சனை ரூ. 1.50 கோடிக்குத் தேர்வு செய்தது மும்பை அணி.

இதையடுத்து ஜை ரிச்சர்ட்சனுக்குப் பதிலாக ஆஸி. ஒருநாள் அணியில் நாதன் எல்லீஸ் தேர்வாகியுள்ளார்.

# மெக்ஸிகன் டென்னிஸ் மினார் பட்டம் வென்றார்

மெக்ஸிகன் ஓபன் டென்னிஸ் போட்டியில் ஒற்றையா பிரிவில் சாம்பியன் பட்டம் வென்றார் ஆஸி. வீரர் அலெக்ஸ் டி மினார்.

மெக்ஸிகோவின் அகாபுல்கோ நகரில் நடைபெற்ற இப்போட்டியின் இறுதி ஆட்டம் சனிக்கிழமை இரவு நடைபெற்றது. ஆஸி. வீரா அலெக்ஸ் டி மினாரும்–அமெரிக்க வீரா டாமி பாலும் மோதினா.

இதில் முதல் செட்டை 3–6 என இழந்தா அலெக்ஸ். எனினும் பின்னா சுதாகரித்து ஆடி, அடுத்த இரண்டு செட்களையும் 6–4, 6–1 என தன்வசப்படுத்தினார். 2.5 மணிநேரம் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 5 பிரேக் பாயிண்டுகளை சேமித்தார். அலெக்ஸ் மினா வெல்லும் 7ஆவது மற்றும் முதல் ஏடிபி 500 பட்டம் இதுவாகும்.

கடினமாக உழைத்தால் வெற்றியுடன் திரும்பலாம் என்ற நிலையில், இண்டியன்வெல்ஸ், மியாமி போட்டிகளுக்கு தயாராவதாக கூறினார் அலெக்ஸ் மினார்.

# சாதனைப் பதிவு

மகளிர் ப்ரீமியர் லீக் தொடரில் பரபரப்பான ஆட்டம் ஒன்றில் குஜராத் ஜெயண்ட்ஸ் அணியை 3 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள்ளது யூபி வோரியர்ஸ் அணி.

கிரேஸ் ஹாரிஸின் அதிரடி ஆட்டத்தால் புதிய சாதனையைப் படைத்துள்ளது உ.பி. வோரியர்ஸ் அணி. முக்கியமான மகளிர் ரி20 லீக் போட்டிகளில் இதுவரை எந்த அணியும் கடைசி 4 ஓவர்களில் 63 ஓட்டங்கள் என்கிற இலக்கை வெற்றிகரமாக விரட்டியதில்லை.

இதற்கு முன்பு, 2022–23 டபிள்யுபிபிஎல் போட்டியில் சிட்னி சிக்ஸர்ஸ் அணி, பிரிஸ்பேன் ஹீட் அணிக்கு எதிராக 61 ஓட்டங்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. நேற்றைய ஆட்டத்தில் கிரேஸுக்கு உறுதுணையாக இருந்த எக்லஸ்டோன், அந்த ஆட்டத்தில் ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்கள் எடுத்திருந்தார்.

மேலும் மகளிர் ரி20 லீக் போட்டிகளில் இதுவரை எந்த அணியும் கடைசி 3 ஓவர்களில் 50க்கும் அதிகமான ஓட்டங்களை வெற்றிகரமாக விரட்டியதில்லை. உ.பி. வோரியர்ஸ் அணியின் வெற்றிக்கு 53 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.03.2023 இல் வெளியிடப்பெற்றது.